ஸ்ரீ மாயூரநாதர் துணை

# மாயூரம் என்று வழங்குகிற திருமயிலைத் திரிபந்தாதி

25756

ஆசிரியர்

இராமையர்

மகாமகோபாத்தியாய

டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்

பெசன்ட் நகர் - சென்னை - 600 090

1997

ஸ்ரீ மாயூரநாதர் துணை

# மாயூரம் என்று வழங்குகிற திருமயிலைத் திரிபந்தாதி

ஆசிரியர்

**இராமையர்**

**மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி**
**உ.வே. சாமிநாதையரவர்களால்**
பரிசோதிக்கப்பெற்று
அவர் எழுதிய குறிப்புரை, முகவுரை
முதலியவற்றுடன்
பதிப்பிக்கப்பெற்றது.

**மகாமகோபாத்தியாய**
**டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்**
பெசன்ட் நகர் - சென்னை - 600 090
**1997**

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ.வே. சாமிநாதையர்
நூல்நிலைய வெளியீடு எண்.134

நூல்நிலைய முதற்பதிப்பு - 1997 - 1000 பிரதிகள்

© மகாமகோபாத்தியாய
டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்
பெசன்ட் நகர், சென்னை - 90

விலை.ரூ.25/-

Printed at Shri Vignesh Prints, Chennai - 600 033.
Ph : 484 8486

# பொருளடக்கம்


| | |
|---|---|
| குறிப்புரையில் மேற்கோளாகக் காட்டியிருக்கும் நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி | iv |
| பதிப்பாளர் குறிப்பு | v - vi |
| முகவுரை | vii - xix |
| திருமயிலைத் திரிபந்தாதி மூலமும் குறிப்புரையும் | 1 - 42 |
| செய்யுள் முதற்குறிப்பகராதி | 43-44 |
| இதுவரை தெரியவந்துள்ள அந்தாதி நூல்களின் அகரவரிசைப் பட்டியல் | 45-53 |

## குறிப்புரையில் மேற்கோளாகக் காட்டியிருக்கும் நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி

அழகர் கலம் - அழகர் கலம்பகம்

கம்ப - கம்பராமாயணம்

கலி - கலித்தொகை

குறுந் - குறுந்தொகை

கோயில் நான்மணி - கோயில் நான்மணிமாலை

சிலப் - சிலப்பதிகாரம்

சிவஞான வள்ளலார் - சிவஞானவள்ளலார் சாத்திரம்

சிவரக - சிவரகசியம்

சிற் - திருச்சிற்றம்பலக் கோவையார்

சிறப்பு - சிறப்புப்பாயிரம்

சீவக - சீவகசிந்தாமணி

தக்க - தக்கயாகப் பரணி

தஞ்சை - தஞ்சைவாணன் கோவை

தாயுமானவர் - தாயுமான்வர் பாடல்

திருச்சிற் - திருச்சிற்றம்பலக் கோவையார்

திருவா - திருவாசகம்

திருநா - திருநாவுக்கரசு நாயனார்

தே - தேவாரம்

ந - நச்சினார்க் கினியர்

நன் - நன்னூல்

ப - பக்கம்

பிரபோத - பிரபோத சந்திரோதயம்

பெருங் - பெருங்கதை

பேர் - பேராசிரியர்

மயிலை - மயிலை நாதருரை, திருமயிலைத் திரிபந்தாதி

வில்லி பாரம் - வில்லிபுத்தூராழ்வார் பாரதம்

# பதிப்பாளர் குறிப்பு

திருமயிலாடுதுறை என்னும் இத்தலம் சோழநாட்டில் காவிரிக்குத் தென்கரையில் உள்ளது. தேவாரம் பெற்ற தலம். திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடியிருக்கின்றார்கள். இப்பொழுது மாயூரம் என்றும் வழங்கப்படுகிறது. மயிலாடுதுறை என்பதின் மரூஉ **மயிலை.** சென்னையிலுள்ள மயிலாப்பூர் என்னும் தலமும் **மயிலை** என்று வழங்கப்படுகிறபடியால் இது தென்மயிலை என்றும், சென்னையிலுள்ள தலம் வடமயிலை என்றும் பெயர் பெறும். முருகக்கடவுளின் தலமாகிய மயிலாசலத்திற்கும் **மயிலை** என்னும் பெயர் உண்டு.

ஸ்காந்தம், சிவரகசியம், சிதம்பரபுராணம், முதலிய நூல்கள் இத்தலத்தைச் சிறப்பித்துக் கூறுகின்றன. மகாவித்துவான் திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இத்தலத்திற்கு ஒரு புராணம் பாடியுள்ளார்கள். பிரமதேவர் பூசித்தமையின் பிரமலிங்கம் எனவும், தேவர்கள் எண்ணியவற்றை வரையாது அருளினமையால் ஸ்ரீ வரதானேசுவரர் அல்லது வள்ளலார் எனவும், மயில் வடிவம் பெற்றுப் பூசித்து வழிபட்ட அம்பிகைக்கு ஆண்மயிலாக ஆடிக்காட்சியளித்துப் பின்பு தாண்டவமாடி அருள் செய்தமையின் கௌரிமாயூரநாதர், கௌரிதாண்டவேசுரர் என்னும் திருநாமங்கள் வழங்கலாயின.

அச்சமுற்றுத் தன்னைச் சரணடைந்த ஒரு மயிலுக்கு அபயம் அளித்துப் பாதுகாத்தமையால் அபயப்பிரதாம்பிகை, அபயாம்பிகை, அஞ்சல்நாயகி, அஞ்சலை என்னும் பெயர்கள் வழங்கலாயின. இத்தலத்தின் வேறு பெயர்கள் : பிரமபுரம், பிரமவனம், கௌரீமாயூரம், மாயூரம், மயிலாடுதுறை, சூதவனம் முதலியன. துறை என்பது தீர்த்த விசேடமுள்ள இடத்தைப் புலப்படுத்தும் ஒரு பெயர்.

அகத்திய தீர்த்தம், அநவித்யாசரஸ், விருஷப தீர்த்தம், கணேச தீர்த்தம், காசியப தீர்த்தம், இந்திரன் முதலிய திக்பாலகர் தீர்த்தங்கள் பாபநாச தீர்த்தம்,பிரம தீர்த்தம் முதலிய 86 தீர்த்தங்களைக் கொண்டது இத்தலம்:

மாயூரநாதரை வழிபட்டுப்பேறு பெற்ற சப்த மாதாக்கள் தனித்தனியே பூசித்துத் தவஞ்செய்து கொண்டிருந்த ஏழு தலங்கள் பக்கத்தில் உள்ளன.

இத்தலத்தைப்பற்றி விரிவான செய்திகளை இந்நூலுக்கு ஐயரவர்கள் எழுதியுள்ள முகவுரையின் மூலம் நன்கு அறிந்து கொள்ளலாம்.

இந்நூலின் மூலத்தை மட்டும் ஐயரவர்கள் 1888-ஆம் ஆண்டு முதற்பதிப்பாகவும், 1930-ஆம் ஆண்டு நன்கு ஆராய்ந்து குறிப்புரை, முகவுரையுடன் இரண்டாம் பதிப்பாகவும் தமிழ் உலகத்திற்கு அளித்தார்கள். இப்பொழுது இந்நூலிற்கு 107-ஆண்டு நிறைகின்றபடியால் ஐயரவர்கள் பதிப்பித்துள்ள நூல்களை மறுபதிப்புச் செய்ய வேண்டும் என்று ஐயரவர்கள் பேரர் அமரர் திரு. க. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் எண்ணத்தின் காரணமாக இந்நூலினை நூல்நிலைய முதற்பதிப்பாகத் தமிழுலகத்திற்கு நூல் நிலையம் அளிக்கின்றது. ஒப்புநோக்குதல் முதலிய பணிகளை செய்தவர் நூல்நிலைய ஆராய்ச்சித் துறையில் உதவியாளராகப் பணிபுரியும் செல்வி. இந்துமதி அவர்கள்.

நன்கு அச்சிட்டுக் கொடுத்த ஸ்ரீ விக்னேஷ் அச்சக உரிமையாளர்களுக்கு நன்றி.

பெசன்ட் நகர்,
சென்னை - 90.
30-08-1997.

வித்துவான் சு. பாலசாரநாதன்
டாக்டர் உ.வே. சாமிநாதையர்
நூல் நிலையம்.

உ

கணபதி துணை

## முகவுரை

### தேவாரம்

## திருநாவுக்கரசு நாயனார்

### திருச்சிற்றம்பலம்

வெஞ்சி னக்கடுங் காலன் விரைகிலான்
அஞ்சி றப்பும் பிறப்பும் அறுக்கலாம்
மஞ்சன் மாமயி லாடு துறையுறை
அஞ்ச லாளுமை பங்க னருளிலே.

**க**விஞர்கள் தாம் பிறந்த இடங்களிலும், பழகிய வேறிடங்களிலும் உள்ள தெய்வங்களையும், தம்மை ஆதரித்தோர்களையும் பாராட்டி முறையே பக்தியாலும் செய்ந்நன்றியறிவாலும் தங்கள் உள்ளக் கருத்தை அமைத்துப் பிரபந்தங்கள், தனிப்பாடல்கள் முதலியவற்றை இயற்றுதல் இயல்பு. அவற்றால் அவர்களுடைய மனநிலைகளும் கொள்கைகளும் சரித்திரங்களும் கால இயற்கையும் பல நீதிகளும் புலப்படும். பெருங்காப்பியங்களைப் படித்து அறிந்து கொள்ளவேண்டிய செய்திகளைப் பிரபந்தங்களால் எளிதில் அறிந்து கொள்ளலாமென்று அறிஞர் கூறுவர். பழைய காலத்தில் தமிழ்ப் பள்ளிக்கூடங்களில் பிரபந்த வகைகளும் இன்றியமையாத பாடங்களாகக் கற்பிக்கப் பெற்று வந்தன. அம்முறையால் நாளடைவில் உண்டான பயன் மிக அதிகம்.

அத்தகைய பிரபந்தங்கள் தமிழில் 96 வகைப்படும். அவற்றுள் ஒவ்வொரு வகையிலும் அவ்வக் காலங்களுக்கேற்பப் பலராற் செய்யப்பட்ட நூல்கள் பல. **அந்தாதி** யென்பது அப்பிரபந்த வகைகளுள் ஒன்று. அது முதற் செய்யுளின ஈற்றடியிலுள்ள இறுதிச்சீர் முதலியவற்றை

அடுத்த செய்யுளின் ஆதியாகக் கொண்டு மண்டலித்து வருவது. அது வெண்பாக்களாலேனும் விருத்தங்களாலேனும் கட்டளைக்கலித்துறைகளாலேனும் நூறு செய்யுட்களால் இயற்றப்படும்; இந்த அளவிற் குறைந்து வருவனவும் உண்டு. கலம்பகம் முதலியனவும் அந்தாதியாகச் செய்யப் படுமேனும் அந்தாதியாக வருதலொன்றையே சிறப்பிலக்கணமாகக் கொண்டமையால் அஃது அப்பெயர் பெற்றது. மனப்பாடஞ் செய்வதற்கு அனுகூலமாக இருத்தற்கும் அப்பிரபந்தம் ஏற்பட்டிருக்கலாமென்று தோற்றுகிறது. நிற்க.

**திருமயிலை திரிபந்தாதி** யென்னும் இந்நூல் நூறு கட்டளைக் கலித்துறைகளாலாகியது. சொல்லணியாகிய திரிபு இதனுள் அமையப் பெற்றிருத்தலின் இஃது இப்பெயர் பெற்றது. ஒவ்வோரடியின் முதலெழுத்தொழிந்த எழுத்துக்கள் சிலவும் பலவும் ஒத்துப் பொருள் வேறுபட்டு வருவது திரிபாகும். திரிபு திருகலென்றும் வழங்கும்.

இதனை இயற்றியவர் இராமையரென்பவர்; இவர் அந்தண குலதிலகர். இவருடைய ஊர் மாயூரம். இவர் தமிழிலக்கணங்கள் ஐந்தையும் கற்றுத் தேர்ந்தவர். இவை, "கயிலையொன் றீசன்" என்னும் இந்நூற் சிறப்புப் பாயிரத்தால் விளங்கும். இவர் இயற்றிய வேறுநூல் திருநாகைக் காரோணத்தைச் சேர்ந்த **நாகூரின் தலபுராணம்**. அஃது இவருடைய இளமைப் பிராயத்தில் இயற்றப் பெற்றிருத்தல் வேண்டுமென்று அதன் நடையால் தோற்றுகின்றது. அதனாற் சில வழக்கங்களும் ஆலய வழிபாட்டு முறையும் விழாக்களின் நிகழ்ச்சி முறையும் பிற அரிய விஷயங்களும் விளங்கும்.

**குலோத்துங்க சோழனுலாவின் உரையில்** எடுத்தாளப் பட்டிருக்கும் **சேறாடி**யென்பது * விருதாவளியைச் சேர்ந்த தென்று அந்நூலிலுள்ள பிரயோகத்தால் விளங்கிற்று.

இதன் ஆசிரியர் சிவபக்தி மிக்கவரென்பதும் செய்யுட்களை வருத்தமின்றிப் பாடும் இயல்பினரென்பதும் இயற்கை வளத்தை அறிந்து அனுபவித்தவரென்பதும் இவ்வந்தாதி யால் விளங்குகின்றன.

---

* விருதாவளி-அரசர் முதலியோர் பெறும் பட்டவரிசை.

**மயிலை**யென்பது சோழநாட்டின்கண். காவிரிக்குத் தென்பாலுள்ளதும் தேவாரம் பெற்றதுமாகிய ஒரு சிவஸ் தலம்; மாயூரமென்று இப்பொழுது வழங்கப்பெறும். மயிலையென்னும் பெயர் இத்தலத்தின் மற்றொரு பெயராகிய மயிலாடுதுறையென்பதன் மரூஉவாகும். தொண்டை நாட்டிலுள்ள மயிலாப்பூரென்னும் சிவஸ்தலத் திற்கும் மயிலையென்னும் பெயருண்மையின், அது வடமயிலை யென்றும், இது தென்மயிலையென்றும் வழங்கும். (இந்நூல், *8, 37, 70, 86, 88*-ஆம் செய்யுட்களைப் பார்க்க.) முருகக் கடவுளின் தலமாகிய மயிலாசலத்திற்கும் மயிலையென்னும் பெயருண்டு.

இந்த மாயூரம் நாவலந்தீவில் மிகப் புகழ் பெற்றதாதலின் இதன் விசேடங்களைச் சுருக்கமாக இங்கே எழுதலானேன்.

**ஸ்காந்தம்** முதலிய மகா புராணங்களிலும், மகேதிகாச மாகிய **சிவரகஸ்யத்திலும், துலாகாவேரி மாகாத்மியத்**திலும், **ஸ்ரீசிதம்பர புராணம்** முதலிய தலபுராணங்கள் பலவற்றிலும் இத்தலம் பலபடச்சிறப்பித்துப் பாராட்டப் பெற்றுள்ளது. வடமொழியில் **ஸ்ரீமாயூர புராணம் ஸ்ரீரிஷபதீர்த்த மாகாத்மியம்** முதலிய நான்கு புராணங்களும், அவற்றின் மொழிபெயர்ப்பாகப் **பொன்விளைந்தகளத்தூர் ஆதியப்ப** நாவலரென்பவர் சற்றேறக்குறைய 350 வருடங்களுக்கு முன்பு இயற்றிய புராணமொன்றும், என்னுடைய ஆசிரியரும் **திருவாவடுதுறை** யாதீனத்து மகாவித்துவானுமாகிய **திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளை** யவர்களால் 60 வருடங்களுக்கு முன்பு இயற்றப்பட்ட புராணமொன்றும், இந்த அந்தாதியையன்றி **ஸ்ரீ அபயாம்பிகைபிள்ளைத் தமிழ்** முதலிய பிரபந்தங்களும், தென்மொழி வடமொழிகளிற் சிறந்த ஸங்கீத வித்துவான்களால் இயற்றப்பட்ட பல கீர்த்தனங் களும், பல ஸ்தோத்திரங்களும், தனிப்பாடல்களும் இத்தலத் திற்கு அமைந்திருக்கின்றன.

பிரமதேவர் பூசித்தமையின் **பிரமலிங்க**மெனவும், தேவர் முதலியோர் எண்ணியவற்றை வரையாதருளிச் செய்தமை யின் **ஸ்ரீவதானீசுவரர்** அல்லது **வள்ளலா**ரெனவும், தட்சன் புத்திரியாக அவதரித்தமை பற்றி வந்த திருநாமமாகிய தாட்சாயணியென்பதை அவன் பாலுள்ள வெறுப்பினால் நீக்கிக் கொள்ள நினைந்து மயில் வடிவம் பெற்றுப் பூசித்து வழிபட்ட அம்பிகைக்கு ஆண் மயிலாக ஆடியருளிக்

காட்சியளித்துப் பின்பு தாண்டவமாடி அனுக்கிரகம் செய்தமையின் **கௌரீ மாயூரநாதர்,** கௌரீதாண்டவேசுவரர் அல்லது **மாயூரநாதர்** எனவும் ஸ்வாமியின் திருநாமங்கள் இங்கே வழங்கும்; இன்னும் வெவ்வேறு காரணங்களால் வந்த **விருத்தர்** (கிழவர்) முதலிய பல பெயர்களுமுண்டு.

மிகவும் அச்சமுற்றுத் தன்னைச் சரணடைந்த ஒரு மயிலுக்கு அபயமளித்துப் பாதுகாத்தமையின், **அபயப் பிரதாம்பிகை, அபயாம்பிகை, அஞ்சல்நாயகி, அஞ்சலை** யென்னும் திருநாமங்கள் அம்பிகைக்கு இங்கே வழங்கலாயின.

இந்த ஸ்தல விருட்சம் மா.

**இத்தலத்தின் திருநாமங்கள்:** பிரமபுரம், பிரமவனம், கௌரீ மாயூரம், மாயூரம், மயிலாடுதுறை, மயிலை, சூதவனம் முதலியன. துறையென்பது தீர்த்த விசேடமுள்ள இடத்தைப் புலப்படுத்தும் ஒருபெயர்.

**தீர்த்தங்கள்:** அகஸ்திய தீர்த்தம், அநவித்யாஸரஸ், விருஷப தீர்த்தம், கணேச தீர்த்தம், காசியப தீர்த்தம், இந்திரன் முதலிய திக்பாலகர் தீர்த்தங்கள், பாபநாச தீர்த்தம், பிரமதீர்த்தம் முதலிய 86 தீர்த்தங்களுள்ளன.

வருஷந்தோறும் ஐப்பசி மாதத்தில் ஒவ்வொரு தினத்தும் ஸ்ரீ மாயூரநாதர் ஸ்ரீ **அபயாம்பிகை**யுடன் காவேரிக்கு எழுந்தருளிக் காலையில் விருஷப தீர்த்தத்தில் தீர்த்தம் கொடுத்தருளும் மகிமை வாய்ந்த ஸ்தலமாதலின், ஐப்பசி மாதம் முப்பது தினங்களிலும் ஸ்ரீ காசி முதல் கன்னியாகுமரிவரையிலுள்ள இடங்களிலிருந்து வந்து ஸ்நானஞ் செய்துவிட்டுச் செல்லும் லட்சக்கணக்கான பக்த ஜனங்களின் தொகுதி யாவருடைய உள்ளத்தையும் கனியச் செய்யும். அக்காட்சி பக்தியில்லாதவர்களுக்குப் பக்தியை யுண்டு பண்ணும்; தெய்வமில்லை யென்பவர்களுக்கும் புநர்ஜன்மமில்லை யென்பவர்களுக்கும் அவை உண்டென்னுங் கருத்தைப் பிறப்பிக்கு மென்பதிற் சிறிதும் ஐயமில்லை.

விருஷப தீர்த்தத்தில் கங்கை வந்து நீராடுவதற்கு அறிகுறியாக ஐப்பசி மாதத்தில் அமாவாசையில் பகல் பதினைந்து நாழிகைவேளையில் இந்த விருஷப தீர்த்தத்தி

லிருந்து எடுத்து ஒரு பாத்திரத்தில் வைக்குந் தீர்த்தம் மிகுந்த தூய்மையோடு பல வருடங்களிருத்தலை நேரே அறிந்து பார்த்தோர் பலர்.

இந்த ஸ்தல தரிசனத்திற்கு எழுந்தருளிய **திருஞானசம்பந்தமூர்த்தி நாயனா**ருக்குக் காவேரிப் பிரவாகத்தை வடியச்செய்து துறையைக் காட்டி அவரை இங்கே வரவிடுத்தமையின், கிழக்கேயுள்ள திருவிளநகரில் (1) **துறைகாட்டும் வள்ளலெனவும்**, நல்ல வாக்கை விரும்பித் தவஞ்செய்த ஸ்ரீபிருகஸ்பதி பகவானுக்கு அதனை யருளிச் செய்தமையின் இதன் தெற்கேயுள்ள தாருகா வனத்தில் (பெருஞ்சேரியில்) (2) **வாக்குக் காட்டும் வள்ளல்** (வாகீசர்) எனவும், ஒரு சமயத்தில் வழிதெரியாமல் மயங்கிய தேவர்களுக்கு வழிகாட்டி யருளினமையின் மேற்கேயுள்ள **மூவலூரில்** (3) **வழிகாட்டும் வள்ளல்** (மார்க்கஸகாயர்) எனவும், சிவஞானத்தை விரும்பித் தவஞ்செய்த ஸ்ரீ விருஷபதேவருக்கும் ஏனையோர் பலருக்கும் ஸ்ரீ தட்சிணாமூர்த்தியாக எழுந்தருளிய மோனமுத்திரை காட்டிச் சிவஞானத்தை உபதேசித் தருளினமையின் **உத்தரமாயூரத்**தில் வள்ளலார் கோயிலில் (4) **கைகாட்டும் வள்ளலெனவும்** திருநாமங் கொண்டு வள்ளலாகிய ஸ்ரீ மாயூரநாதர் வீற்றிருக்கின்றனர்:

(1) "காவிரித்துறை காட்டினார்" (**திருவிளநகர்த் தேவாரம்**); "துறை காட்டும் வள்ள லோவென்றிறைஞ்சினர்"; (2) வாக்கருள் வள்ளலென்று, பெருக்கவெவ்வுலகுமேத்தப் பிறங்கினா னனைய மூர்த்தி"; (3) "வழிகாட்டும் வள்ள லோவென்றுரைத்தனர்"; (4) "இடபமுன் பெற்றார் போல வெண்ணிலார்க் கருளுநீரா, லுடனம ரவன்கை காட்டும் வள்ளலென் றொருபேர் பெற்றான்" (**மாயூரப் புராணம்**, மாயூரவள்ளல் நாற்றிசை வள்ளலாகிய படலம்.)

இதன் எல்லை, ஒரு யோசனையென்றும், எட்டு வீரட்டத்துள் காலஸம்ஹார க்ஷேத்திரமாகிய **திருக்கடவூரும்** தட்சயாகஸம்ஹார க்ஷேத்திரமாகிய **திருப்பறியலூரும்** கஜஸம்ஹார க்ஷேத்திரமாகிய **வழுவூரும்** காமதகன க்ஷேத்திரமாகிய திருக் **குறுக்கையும்** இதனெல்லைக்குள் உள்ளனவென்றும் இத்தலபுராணங்கள் கூறாநிற்கும். இது, "பார

வாவுமா, யூர வெல்லையுட், சார வானர்வா, யாரவேத்திட'', ''இட்ட மாயவீ, ரட்ட நான்கெனிற், பட்ட மான்மியம், சட்ட யார்சொல்வார்'' (**மாயூரப் புராணம்,** காமன் பூசைப் படலம், 17-8) என்பவற்றால் அறியப்படும்.

ஸ்ரீ மாயூரநாதரை வழிபட்டுப் பேறு பெற்ற ஸப்த மாதாக்கள் தனித்தனியே பூசித்துத் தவஞ்செய்து கொண்டிருந்த ஏழு சிவஸ்தலங்கள் இதன் பக்கத்தேயுள்ளன. அவற்றுள், (1) பிராமி பூசித்த ஸ்தலம் **திருத்தான்றோன்றீசம்** (சுயம்புநாதர் கோவில்); (2) மாகேசுவரி பூசித்தது **கருணாபுரி** (கருணாம்பேட்டை); (3) கௌமாரி பூசித்தது **கஞ்சாறு** (ஆநந்த தாண்டவபுரம்); (4) வைஷ்ணவி பூசித்தது **பசுபதீசுவரம்** (வள்ளலார் கோவிலுக்கும் தருமபுரத்திற்கும் இடையிலுள்ளது); (5) வாராகி பூசித்தது **சக்திபுரி** (கழுக்காணிமட்டம்); (6) இந்திராணி பூசித்தது **தருமபுரம்;** (7) சாமுண்டி பூசித்தது **வள்ளலார் கோயில்**. இது ஷை புராணத்திலுள்ள சத்தபுரப்படலத்தால் அறியலாகும்.

ஸ்ரீ மாயூரநாதரை வழிபட்டுப் பேறுபெற்ற இந்திரன் முதலிய திக்பாலர்களும் மற்றைத் தேவர்களும் அகத்தியர் முதலிய பல முனிவர்களும் ஏனையோர் பலரும் தத்தம் பெயரால் பிரதிட்டித்துப் பூசித்த சிவலிங்கங்களும் தீர்த்தங்களும் இத்தலத்தைச் சூழப் பல உள்ளன.

மேற்கூறிய தேவர் முதலியோர்களையன்றிக் கழுகு, கிளி, குதிரை, நரி, பூனை, யானை, வானரம், கரம் முதலிய அஃறிணைகளும் ஸ்ரீ **மாயூரநாதரை** வழிபட்டுப் பேறு பெற்றனவென்றும் அந்தப் புராணங்கள் தெரிவிக்கின்றன.

மயில் வடிவம் நீங்கி இயற்கையான திருவுருவமுற்ற அம்பிகையின் பிரார்த்தனைப்படி சபையொன்றை நிருமித்து அதில் ஸ்ரீ மாயூரநாதர் தாண்டவமாடியருளி விஷ்ணு முதலிய தேவர்களின் பிரார்த்தனையின்படி அம்பிகையை இங்கே திருமணஞ் செய்தருளினர். அந்தச் சபைக்கு **ஆதிசபை** யென்பதும் அத்தாண்டவத்திற்குக் **கௌரீ தாண்டவ** மென்பதும் திருநாமங்கள். மேற்கூறிய திருமணம் வருஷந்தோறும் துலாமாஸ உத்ஸவத்தில் ஏழாவது திருநாளின் மாலையில் நடைபெற்று வருகின்றது. ''மயிலாடு

துறையுறையு மணாள னாரும்'' என்னுந் **தேவாரமும்** இதனை நன்கு புலப்படுத்தும்.

கங்கையின் பிரிவாற்றாமையினால் **ஸ்ரீ காசி விசுவநாதர்** தம்முடைய பரிவாரங்களுடன் இங்கே எழுந்தருளி விருஷப தீர்த்தத்தின் தென்பக்கத்திற் கோயில் கொண்டிருக்கின்றனர்.

முக்தியை விரும்பிப் பல சிவஸ்தலங்களுக்குச் சென்று தவஞ்செய்து வந்த தம்பதிகளாகிய **நாதசன்மா அநவித்தை** யென்பவர்கள் முடிவில் திருவையாற்றை யடைந்து தவஞ்செய்து ஸ்ரீ ஐயாறப்பர் கட்டளையின்படி இத்தலத்திற்கு வந்து தவஞ்செய்ய, ஸ்ரீமாயூரநாதர் அவர்களுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்ததன்றி எம்மைத் தரிசித்த பலனை உங்களைத் தரிசித்த பின்பே யாவரும் அடையக் கடவரென்றும் அருளிச்செய்ய, கேட்ட அவர்கள் பேரானந்தமுற்றுத்தாம் இங்கே பிரதிட்டித்துப் பூசித்த சிவலிங்கங்களில் ஐக்கியமாயினர்; அவர்கள் பிரதிட்டித்த சிவலிங்கங்கள் அவர்கள் பெயராலேயே வழங்கப்பெற்று வருகின்றன. அவற்றுள் அநவித்தை ஐக்கியமான லிங்க மென்பதற்கு அறிகுறியாக அதற்கு இக்காலத்தும் புடவையே சாத்தப்பட்டு வருகின்றது. ஸ்ரீ மாயூரநாதரையும் ஸ்ரீ அபயாம்பிகையையும் தரிசிப்போர் ஸ்ரீ சண்டிகேசுவர சண்டிகேசுவரிகளைத் தரிசித்த பின்பு இவ்விரு மூர்த்தி களையும் தரிசிப்பது இத்தலத்தில் வழக்கமாக இன்றும் நடைபெற்று வருகின்றது. இஃது இத்தல புராணத்திலுள்ள **நாதசன்மா அநவித்தை முக்தியடைந்த படலத்தால்** அறியலாகும். ''தண்டீசர்ப் போற்றியடி தாழ்ந்த பின்பும் வேறிருவர்க், கண்டாய்விற் போற்றவருள் காலூரும்'' **(திருவிடைமருதூருலா.)**

நாதசன்மா அநவித்தை யென்பவர்களுடன் இத்தலத் திற்கு எழுந்தருளிய ஸ்ரீ ஐயாறப்பர் இங்கே ஸ்ரீ மாயூரநாதர் கோயிலின் மேலைரத வீதியின் மேற்கே பரிவாரங்களுடன் கோயில் கொண்டெழுந்தருளி ஸப்தஸ்தான உத்ஸவமும் கொண்டருளுகின்றனர். அந்த உத்ஸவம் இக்காலத்தும் சித்திரை மாதத்தில் நடைபெற்று வருகின்றது; அந்த ஸ்தானங்களின் பெயர்கள் வருமாறு: (1) **புழுகீசுவரம்** (தனியூர்), (2) **ஸித்தவனம்** (சித்தக்காடு), (3) **மூவலூர்,**

**(4) சோழம்பேட்டை** (இது புருஷாமிருகம் பூசித்த விசேஷமுடைய ஸ்தலம்), **(5) வள்ளலார் கோயில், (6) காசி விசுவநாதர் கோயில், (7) ஸ்ரீ மாயூரநாதர் கோயில்.**

அகத்திய விநாயகரைக் காப்பிலும், ஸ்வாமியின் திருநாமங்களுள் வள்ளலென்பதை, "மயிலையுறை வள்ளல்", "பிறைமோலிதிகழ் வள்ளல்", "செய்சூழ் மயிலையில் வள்ளல்" (காப்பு, 16, 35, 40, 41, 44, 70, 100) என்பன முதலியவற்றாலும் மணாளனென்பதை, "தனியநகைக்கு மணாளா", "சிலையமலைக்குமணாளர்" (24, 40) என்பவற்றாலும், மாயூரநாத ரென்பதை, "மாயூர நாத மயிலையி லீச" (11) என்பதனாலும், விருத்த ரென்பதை, "மயிலைப் பதியகலா முதியன்" (51) என்பத னாலும், அம்பிகையின் பெயர் அஞ்சலென்பதை, 'பொருமயி லைப்பதி கண்ணஞ்சன் மாதும்" (16) என்பத னாலும், காவிரியின் பெருமையை, "உத்தர கங்கையி னோங்கிய பொன்னி", "பொன்னித் துறை", "தூயகமான கனகாவிரிநதி", "நித்திலங்க டீரம் பரவுந் திருக்காவிரி" (7, 23, 59, 88) என்பவற்றாலும், சிவபெருமான் நடனஞ் செய்ததை, "அரங்கந்தண் மயிலையிலொன்று கொண்டாடு மையர்", "மயிலைப் பானன்று மன்றுட் கோதினடந்தக வாடினன்", "நடனஞ்சமுகந்தருக்குறச் செய்திடுநாதனும்" (9, 67-8) என்பவற்றாலும், அகத்தியர் பூசித்ததை, "இலைய மலைக்கு", மனமுற யோகத்திருக்கவல்ல, மலைய மலைக் குறு மெய்த்தவன் போற்று மயிலை வள்ளல்", "அன்புடைக்கும்பமுனி பூசைகொண்டவர்" (40, 86) என்பவற்றாலும், இந்திரன் வழிபட்டதை, "அங்குலிசன்றாழ் மயிலையிலீசர்" (99) என்பதனாலும், உமைமயிலாகப் பூசித்ததை, "கவுரியெழின்மயிலாய்முன்பரவத்தர்" (65) என்பதனாலும், உமாதேவிக்கு மயிலுருவத்தை நீக்கி மாயூரநாதர் பழைய உருவத்தை அருளியதை, "மயிற்காய மாய வுருத்தீர்த்துமைக்கு வடிவளித்தோன்" (95) என்பதனாலும், திருமால் பூசித்ததை, "பலதரங்கந்தமலர் கொண்டரி பணிபாதர்", "பணிப்பாயலையகலான்றாழ் மயிலைப்பரமன்" (9, 53) என்பவற்றாலும், நாதசன்மா பூசித்ததை, "நாதசன்மா வணங்கற்புத" (11) என்பதனாலும், பிரமதேவர் பூசித்ததை, "பிரமன் பணிமயிலைத்தலசங்கர்"

(22) என்பதனாலும், இத்தலத்தைச் சேர்ந்த வீரட்டானங்களுள் பறியலில் நிகழ்ந்த தக்கயாகசங்காரத்தை, "தனைத் தள்ளிச்செய்தமகத்தினந்தத்துவருந்தினமாக்கினன்மாமனுக்கே", "தமையன்றித்தக்கன் செய்த பொங்குமகந்தகர்த்தார்" (10, 37) என்பவற்றாலும், வழுவூரில் நிகழ்ந்த கஜசங்காரத்தை, "மூகிலொத்துருமத்தி யன்றீர்ந்தாய்", "மதமுகத்தினந்தத் துவக் கன்றுரித்தோன்" (6, 10, 18, 25, 63, 83, 86, 96) என்பன முதலியவற்றாலும், குறுக்கையில் நிகழ்ந்த காமசங்காரத்தை, "இக்குமதனை வென்றோர்", "காமனைக் காய்ந்தவனும்" (22, 68) என்பவற்றாலும், கடவூரில் நிகழ்ந்த காலசங்காரத்தை, "கொடுங்காலனுங் குன்ற மோதினர்", "அந்தகன் வீழ மோதினன்", "முன்பந்தனைய முனிந்தோன்" (55, 84, 97) என்பவற்றாலும் இந்நூலுள் ஆசிரியர் புலப்படுத்தியிருக்கிறார்.

இதன்பாலுள்ள செய்யுட்களிற் சில அகப்பொருளிலக்கண அமைதியையும் சில புறப்பொருளிலக்கண அமைதியையும் பெற்றுள்ளன. ஸ்ரீ மாயூரநாதரைக் கிளவித்தலைவராகக் கொண்டு கூறப்படுவன புறப்பொருளிலக்கணத்துட் **பாடாண்டிணையிலுள்ள கடவுண்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்தபக்கம் (புறப்பொருள் வெண்பாமாலை, 236)** என்னும் துறையின்பாற் படுவனவாகும். கருத்து விளங்க வேண்டி அச்செய்யுட்களுக்குக் குறிப்புரையில் அகப்பொருட் கிளவித்துறைகளே காட்டப் பெற்றிருக்கின்றன. இம்முறை ஆன்றோர்கள் உரையில் முன்பு கண்டதே.

**அகத்துறைபயின்ற செய்யுட்கள்:** 4, 9, 15, 18-9, 23, 25-8, 31, 34, 36-9, 42, 44, 46-9, 52, 55-6, 60-63, 65-7, 69-75, 79, 82-6, 92, 94, 96-9.

**புறத்துறை பயின்றவை:** 5, 8, 17, 24, 29, 32-3, 35, 41, 43, 57-8, 76, 80, 87, 89, 93, 95.

78-ஆம் செய்யுள் யமகமாகவும், 12, 72-ஆம் செய்யுட்கள் இரண்டடி மடக்குகளாகவும் அமைந்துள்ளன.

சில செய்யுட்களில் ஒரே சரித்திரத்தை நான்கு அடிகளிலும் திரிபில் தொடர்ந்து அமையுமாறு இவர் பாடியிருத்தல் அறிந்து மகிழத்தக்கது; இந்த ஆற்றல் கவிஞர்களிற் சிலர்பாலே அமைந்திருக்கும்.

தூதுக்குரியவற்றுள், அன்னப்பறவை 8, 57-ஆம் செய்யுட்களிலும், வண்டு 32, 93-ஆம் செய்யுட்களிலும், பாங்கி விடுதூது 89-ஆவதிலும் வந்துள்ளன.

இதில் இடையே கூறப்பட்ட வேறு தலங்கள்: தில்லை, 9; கூடல், ஐயாறு, 80.

இந்த ஸ்தலத்தைப் பற்றிக் கூறப்படும் வேறு விசேடங்கள்: நீர்வளம், 7, 23, 46, 50, 59, 77, 87; நிலவளம் 25, 31, 35, 39, 56, 62, 64, 68, 73-4, 76, 89, 98; சோலைவளம், 10, 17, 20, 29, 44, 49, 61, 66, 73-4, 81, 91, 100; கிடங்கு, 3; மதில், 4; ஆவணம், 5, 14; கோபுரம், 4, 58.

"மனையிற் பழகுகிள்ளை தாங்கா வியம்புகன் மாமயிலை' (32) என்பதனால் இத்தலம் கல்வி மிகுதியாக நிறைந்திருந்த இடமென்பதும், "மெய்யர்மகச் சடங்கிடை யாகுதி பெய்யுமயிலை" (85) என்பதனால் வேள்வி புரிபவர் இங்கிருந்தனரென்பதும் குறிப்பிக்கப்படுகின்றன.

**இந்நூலிற் பயின்ற பழமொழிகள்:** வெடிப்பிற்கவிழ்ந் தநீர்போல (26); ஏரி உடைந்தாற்போல (32); இலவுகாத்த கிள்ளைபோல 73.

**வேறு சில விஷயங்கள்:** மணஞ்செய்கையில் அறு கணிதல், 70; துயரக்கண்ணீர் சுடுதல், 60; தேயம் பதினெட்டு, 16; பஞ்சாக்கினிமத்தியில் தவஞ் செய்தல், 34.

இதனுள் ஆதங்கம், சித்தம், நீடம் முதலிய வடசொல் ஒரு மொழிகளும், அதிகாந்திச்சிகரம், தனுபங்குரம் முதலிய பல தொடர்மொழிகளும் காணப்படுகின்றன. இதனால் ஆசிரியர் வடசொற்களை ஏற்றவாறு அமைத்துப் பாடும் இயல்புடையாரென்பது அறியப்படும். சில வடசொற்கள் திரித்தும் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் சில வருமாறு: அவத்தர், 65; அவராதி, 13; இரமை, 31; இலாவம், 17; கணிகம், 87; கந்தர்ப்பவேள்வி, 52; சருமந்தர, 43; சிரசு, 54; பத்தசனம், 15; பறுவதநந்தனை, 71; மனது, 96; வாதை, 75.

**சில சொற்களும் சொற்பிரயோகங்களும்:** ஆட்டி, 96; ஆயல், 66; உரும், 6; ஒடிச்சு, 56; ஒயில், 95; கண்ணிவாய்க்கால்,

***87; கமைந்து, 60; கெஞ்ச, 3; சனியன், 24; சினை-கர்ப்பம், 62; தத்து, 10; தனம், 30, 46; தூரி-தூரிகை, 85; தெறுகுது, 87; படவு, 72; படுகை, 76; லக்கு, 42.***

இவர் சில சிலவிடங்களில் ஒன்றன்பாற் படர்க்கை வினைமுற்றை இறுதி குறைத்தும் வழங்குவர்.

இந்நூற் செய்யுட்களுள், சிலவற்றில் தந்நகரம் வரவேண்டிய விடத்தில், றன்னகரமும் றன்னகரம் வரவேண்டிய விடத்தில் தந்நகரமும் திரிபலங்காரம் நோக்கி வந்தனவெனக் கொள்க. பிற வேறுபாடுகளுக்கும் அவ்வலங்காரமே காரணமாகும்.

இந்நூலாசிரியர் வாக்காகிய **நாகூர்ப் புராணத்தில்** இந்நூலிற் கண்ட சில சொல்வழக்கும் கருத்தும் காணப்படுகின்றன. அவற்றுட் சில வருமாறு:

**மயிலையந்தாதி**

காப்பு. பிதாமகன்பால் வருகும்பமாமுனி;* *"தந்தையாகியநாந் தனையனாநின்னிற் றன்னிலெய் துவ்வதி சயமோ"* **நாகூர்ப் புராணம்,** *சமுத்திர ராசன் பூசித்த. 32.*

ஒருகோட் டிருகும்ப மும்மத நால்வாய்க் களபம்; *"ஒருமருப்பிரண்டு கும்பத், தருவிழும் மதத்து நால்வாயைங்கர னடிகள் போற்றி"* ஷை கடவுள். 4.

2. தத்துவந்தனை யாய்ந்தே.....பிறவாமை பெறுதி நெஞ்சே: *"தத்துவங்களாய்ந்துசிவ ஞானமெய்திச் சார்வர்முத்தி"* ஷை சந்திரதீர்த்த. 51.

16. பதிதன்: *"பவமுறு பதிதரே"* ஷை புன்னாக. 63.

34. அஞ்சாரலின் மெய்த்தவஞ்செய்பினும்: *"பஞ்சாக்கினியினாப்பண்மானவர் தவமுயன்றால்"* ஷை புன்னாகவன. 71.

42. லக்கிட்ட... அம்பு: *"அம்பிலக்கை நோக்கியெய்யின்"* ஷை நாகராசன். 58.

52. கந்தர்ப்பவேள்வி: *"கந்தர்ப்பர்சங்கீதம் பாட"* ஷை இந்திரன் பூசித்த. 50.

---

★ இது பிரமன் அகத்தியரை நோக்கிக் கூறியது.

54. சிரசு: "சிரசின்மீதுகொடு" ஷை நாகராசன் பூசித்த. 66.

61. மலினம்-கருமை. 'விடஞ்சேர் மலின கந்தரம்" ஷை சமுத்திர, 38.

76. மிக்கென் றோதப் படுகை வலியமன்பர்க் கருளுத்தமனே: "நற்கைவல்லிய, முத்தியைக் கொடுக்கு மீச" ஷை நாகராச. 56.

இந்நூல் சம்பந்தமாக இரண்டு நிகழ்ச்சிகள் உண்டு. அவற்றுள் ஒன்று:

**ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை**யவர்கள் தமது இளம் பிராயத்தில் பல ஐயங்களைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டுத் திருவாவடுதுறை ஆதீனத்தில் 14-ஆம் பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ **வேளூர்ச் சுப்பிரமணிய தேசிக**ரவர்களைத் தரிசிக்கப் போகும் வழியிற் பட்டீச்சரத்தில் தங்கியகாலத்து அவ்வூரார் பசுபதி பண்டாரமென்னும் ஒரு தமிழ் வித்துவானைக் கொண்டு பரீட்சித்த பொழுது அவர் இந்நூலிலுள்ள, "நன்கொடிச்சிக்கை" (56) என்னும் செய்யுளைக் கூறிப் பொருள் வினாவினார். பிள்ளையவர்கள் இந்நூலை அதுவரையிற் பாராமலிருந்தும் உடனே அச்செய்யுளின் பொருளைத் துறையுடன் விரைவில் நன்கு விளக்கவே, அதைக் கேட்டவர்கள் பலரும் அவர்களுடைய கல்விப் பெருமையை அறிந்து பாராட்டுவாராயினர். அதன்பின்புதான் அவர்கள் புகழ் கும்பகோணம் முதலிய இடங்களிற் பரவியது. இது, பட்டீச்சரத்திலிருந்த வெள்ளை வாரணம்பிள்ளை யென்பவராலும் பிள்ளையவர்களாலும் கூறப்பட்ட செய்தி.

மற்றொன்று:

யாழ்ப்பாணத்துநல்லூர் ஸ்ரீ **ஆறுமுக** நாவலரவர்கள் சிதம்பரத்தில் இருக்கும்பொழுது பிள்ளையவர்களுடைய மாணாக்கர்களில் ஒருவராகிய தேவிகோட்டை வன் றொண்டச் செட்டியாரென்பவர் அவர்களிடம் இந்நூற் சுவடியைக் காட்டினார். நாவலரவர்கள் அதைப் பிரித்துப் பார்க்கையில், "வலவருமைக்கு" (30) என்னும் செய்யுள் அகப்பட்டது. அதைப் படித்துப் பார்த்து நடையின் நயம் முதலியவற்றை உணர்ந்து மகிழ்ந்து வேறு சில செய்யுட்

களையும் படித்து இன்புற்று, "இந்நூலை அச்சிட்டால் தமிழ் படிப்பவர்களுக்கு நல்ல பயனை அளிக்கும்" என்றார்களாம். இச்செய்தியை அச்செட்டியாரவர்கள் வாயிலாய் அறிந்தேன்.

இந்த இரண்டு செய்திகளுமே இந்நூலை யான் தேடுவதற்கும் படித்தற்கும் காரணமாயின.

இந்நூலின் மூலத்தை மட்டும் சென்ற சருவசித்து வருடம் பங்குனி மாதம் (1888) கும்பகோணத்தில் அச்சிட்டு வெளிப்படுத்தினேன். பிள்ளையவர்களிடத்தில் படிக்கப் போய் முதலிற் சிலமாதம் இருந்து பாடங்கேட்ட இடம் மாயூரமாதலால் அத்தல சம்பந்தமான இந்நூலைப் பதிப்பிக்க நேர்ந்ததைக் குறித்து மிகவும் இன்புறுகின்றேன்.

இந்நூலின் ஏட்டுச் சுவடிகளைக் கொடுத்துதவியவர்கள்: (1) சோழன்மாளிகை ஸ்ரீ இரத்தினம்பிள்ளையவர்கள், (2) மாயூரம் கீழைவீதி ஸ்ரீ வைத்தியலிங்கம் பிள்ளையவர்கள், (3) ஸ்ரீ முத்துச்சாமி பிள்ளையவர்கள், (4) பட்டீச்சரம் ஸ்ரீ வெள்ளை வாரணம்பிள்ளையவர்கள். முத்துச்சாமி பிள்ளையவர்களின் ஏட்டுப் பிரதி மிகப் பழையதாக இருந்தது. அதிற் சில சொற்களுக்குப் பொருளும் வரையப்பட்டிருந்தன. அவை இந்நூலாசிரியரால் எழுதப்பட்டனவோ, அன்றி அவரிடம் பாடங்கேட்டவரால் எழுதப்பட்டனவோ தெரியவில்லை.

இக்காலத்திற் படிப்பவர்களுக்கு உபயோகமாக இருக்கும் பொருட்டு இந்நூல் குறிப்புரையுடனும் ஸ்தல விசேஷம் முதலிய செய்திகளுடனும் இப்பொழுது பதிப்பிக்கலாயிற்று.

இதனை ஆராயுங்காலத்தும் பதிப்பிக்கும் காலத்தும் உடனிருந்து ஸஹாயஞ் செய்தவர் மோகனூர்த் தமிழ்ப் பண்டிதர் சிரஞ்சீவி கி.வா. ஜகந்நாதையர்.

இப்படியே நான் பாடங்கேட்டனவும் ஆராய்ந்து வைத்திருப்பனவுமாகிய பல பிரபந்தங்கள் முதலியவற்றைக் குறிப்புரைகளுடன் முறையே பதிப்பித்து வெளிப்படுத்த எண்ணியிருக்கிறேன். திருவருள் நிறைவேற்ற வேண்டும்.

சென்னை — இங்ஙனம்
*29.5.30* — **வே. சாமிநாதையர்.**

உ

கணபதி துணை

கௌரி மாயூரமென்று வழங்கும்

# திருமயிலைத் திரிபந்தாதி

★

காப்பு.

***ஸ்ரீ அகத்திய விநாயகர்***

கட்டளைக் கலித்துறை

**உ**ருகும் பசும்பொற் சடையார் மயிலை யுறைவள் ளன்மேற்
பெருகும் பயன்பெறு மந்தாதி பாடப் பிதாமகன்பால்
வருகும்ப மாமுனி பூசைகொண் டுள்ள மகிழொருகோட்
டிருகும்ப மும்மத நால்வாய்க் களபத்தை யேத்துதுமே.

(**குறிப்புரை.**) தீயிலுருகியபொன் ஒளியில் மிக்குத் தோன்றுமாதலின், உருகும் பசும்பொனென்றார்; "சுடச் சுடரும் பொன்போ லொளிவிடும்" (**குறள். 267.**) பொற்சடையார்-பொன்போன்ற நிறமுள்ள சடையையு டையவர்; "பொன்போலுஞ் சடைமேற் புனறாங்கிய புண்ணியனே" (**தேவாரம்.**) மயிலை-மாயூரம். வள்ளலென்பது இத்தலத்து ஸ்வாமியின் திருநாமம்; "வள்ளன் மாமயி லாடுதுறை" (**தேவாரம்**); "மாயூர வள்ள லையாம் வணங்கி வாழ்வாம்" (**பழைய மாயூரப்புராணம்**); "ஏர் பூத்த மயிலாடு துறையமரும் வள்ளலா ரிருதாள் போற்றி" (**மாயூரப் புராணம்**); "வள்ளலெனும் பெரிய மாயூர நாதருக்கு" (**காளமேகம். தனிப்.**) பிதாமகன்-பிரமதேவன். கும்பமாமுனி- அகத்தியமகா முனிவர்; குடத்திற் றோன்றியவராதலின், இவர் இப்பெயர் பெற்றார்.

ஒருகோடு-ஒற்றைக்கொம்பு. கும்பம்- யானையின் மத்தகம். நால்வாய்-தொங்கியவாய்; நான்கு வாய் என்பது மற்றொரு பொருள். களபம்-யானைக்கன்று. பாட ஏத்துதுமென முடிக்க. ஒருகோட்டு...: நால்வாய்: "ஒரு கொம் பிருசெவி மும்மதத்து நால்வாய்" (**ஔவைபாட்டு**); "ஒருகோட்ட னிருசெவியன் மும்மதத்த னால்வாயைங் கரத்தன்" (**சிவஞானசித்தியார்**); "ஒருகொம் பிருசெவி மும்மத நால்வாயோ ரைந்துகரம்" (**மருதூரந்தாதி**). ஒருகொம் பிருசெவி மும்மதநால்வாய்: இஃது எண் அணி.

★

## நூல்

1. பூமனை யானையு மாயோனை யுந்தந்த பூங்கடுக்கைத்
தாமனை யானை வனையுந் துவசனைச் சங்கரிசேர்
வாமனை யானை யதளுடை யானை மயிலையிற்செந்
தேமனை யானை மனமே நினைவினை தீருதற்கே.

**(கு-ரை.)** பூமனையானையும்-தாமரைப்பூவை இடமாகக் கொண்ட பிரமதேவனையும். மாயோன்-கரிய நிறமுடைய வன்; "மாயோய்" என்னும் **பரிபாடலு**ரையைப் பார்க்க. கடுக்கைத்தாமனை-கொன்றை மாலையையுடையவரை. ஆனைவனையும்-இடபத்தை எழுதிய. சங்கரி-உமா தேவியார்; சங்கையுடைய திருமால் எனினும் பொருந்தும். வாமனை-இடப்பாகத்தையுடையவரை. யானை அதளுடை யானை-யானைத்தோலை ஆடையாக உடையவரை. தேம்-தேன்; அனையானை-ஒப்பவரை; "திருவையாற மர்ந்ததேனே" (**தே.**)

வினை தீருதற்கு நினையென்க. (1)

2. கேதத் துவந்தனை மாறாப் பவத்திற் கடந்துழலு
நீதத் துவந்தனை யாய்ந்தே மயிலை நிமலர்மலர்ப்
பாதத் துவந்தனை செய்தனை யேற்பல வாஞ்செனன
பேதத் துவந்தனை பாற்பிற வாமை பெறுதிநெஞ்சே.

**(கு-ரை.)** கேதம்-துன்பம். துவந்தனை-பந்தம்; "ஐயா துவந்தனை நாயேனை" (**திருவேங்கடத்தந்தாதி.**) கேதத்து உவந்தனையெனப் பிரித்துத் துன்பத்தைச் செய்யும்

பொருள்களில் மகிழ்ச்சியுற்றாயெனப் பொருள் கூறுதலுமாம். நீ தத்துவந்தனை ஆய்ந்து. பாதம்-திருவடி. வந்தனை செய்தனையே-பணிவாயாயின். சனனபேதங்களில் வந்து. அனைபால் - தாயினிடத்தே. பெறுதி-பெறுவாய். நெஞ்சே, நீ வந்தனை செய்தனையேற் பிறவாமை பெறுதி யென்க; "பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா, ரிறைவ னடிசேராதார்" **குறள்,** *10.* *(2)*

3. **நெஞ்சத் திருக்கை யறுத்தெ னினைவுக்கு நின்சரணக்**
**கஞ்சத் திருக்கை யளித்தாளு வாய்வெங் கடுவைவிண்ணோர்**
**கெஞ்சத் திருக்கையி லேற்றயின் றோய்தண் கிடங்கிலன்ன**
**மஞ்சத் திருக்கை குதிபாய் மயிலையி லற்புதனே.**

**(கு-ரை.)** திருக்கை அறுத்து-மாறுபாட்டை நீக்கி; திருக்கு-வஞ்சனையுமாம். நின்சரணக்கஞ்சத்து இருக்கை-உம்முடைய திருவடித் தாமரை மலரிலிருத்தலை. கடுவை-விஷத்தை. கெஞ்ச-வருந்தி வேண்ட; "இளங்குதலை கொஞ்சிய பசுங்கிளிகள் கெஞ்சியு மிரங்கியினும் வந்திலரையோ" (**அழகர்கலம்பகம்,** *94.*) திருக்கையில்-திருக்கரத்தின்கண். கிடங்கில்-அகழியில். திருக்கை-ஒருவகைமீன். அற்புதன்-ஞானவடிவுடையவன்; "அற்புத மூர்த்தி" **நன். சிறப்பு.** (3)

4. **அற்பக லாமதி காந்திச் சிகரமு மற்புதமாஞ்**
**சிற்பக லாமதி லுஞ்சேர் மயிலைச் சிவன்பொருப்பிற்**
**சொற்பக லாமதி வானுத லாயுண்மை சொல்லுதிநின்**
**கற்பக லாமதி மாலுற்ற போலுமிக் காவலர்க்கே.**

**(கு-ரை.)** அல்பகலாம்-இருளும் பகலாதற்குக் காரணமான. அதிகாந்தி-மிக்கஒளி; அதி: மிகுதிப்பொருள் தருவதொரு வடமொழி யிடைச்சொல்; "அதிகந்தக் குழற் பேதை" (**மயிலை.** *52*); "அதி நுட்பம்" (**குறள்.**) சிகரம்-கோபுரம், விமான முதலியவற்றினுச்சியிலுள்ள தூபி. சிற்ப கலா மதில்-சிற்ப நூல் விதிப்படி அமைக்கப்பட்டுள்ள மதில். கலா-கலை. சொற்பகலாமதி-ஒருகலையையுடைய பிறை போன்ற; சொற்பம் - ஸ்வல்பம்; "சொற்ப மருங்கு" என்பாரின்னும்; *28.* நின்கற்பு அகலாமதி-உன்னுடைய கல்வி நீங்காத மதியானது; கற்பு-கற்பித்தவழியில் நிற்றல். காவலர்க்கு-காவலர் திறத்தில். இக்காவலர்க்கு நின்மதி மாலுற்றதுபோலும் என்க; உற்ற: தொகுத்தல் விகாரம்.

இது பாங்கியின் கூற்று. (4)

5. காவியம் பொன்று மதனேவு முன்னங் கரிய குயிற்
கூவியம் பொன்று தலைநல்கு மாலென்று கோதையுமோர்
ஆவியம் பொன்றுகண் ணீர்மல்கு மானிரை யாவணத்தின்
மேவியம் பொன்றுவைத் தேகு மயிலையில் வித்தகனே.

**(கு-ரை.)** காவி அம்பு ஒன்று-கருங்குவளையாகிய பாணம் ஒன்றை; ஐந்து பாணங்களில் இது கொலைப் பாணம்; *''பூங்காவியம்புகள் வேள்விடும்போதுயிர்போம்''* என்பர்பின்னும்; **32.** கூவுகுயில் இயம்-கூவுகின்ற குயிலாகிய வாத்தியம். மன்மதனுக்குக் குயிலைக் காள மென்று கூறுவர். குயிலின் கொடுமை பின்னுங் கூறப்படும்; *''குயில் கூவுமென்றங்கை துணைச்செவி போர்த்தயரும்'', ''குயிலிசைகேட்டு... அங்க மொடுங்கியுள்ளம்... திகைத்திடு மால்''* என்பர் பின்னும்; **29, 43.** பொன்றுதலை- இறத்தலை. ஓர் ஆவி அம்பு ஒன்று கண்ணீர் மல்கும்- ஒரு குளத்தின் கண்ணுள்ள நீரைப்போன்ற கண்ணீரைப் பெருகவிடுவாள். இதில் கூறப்படும் காவியம்பும் ஆவியம்பும் பின்னும் (32) கூறப்பட்டுள்ளன. ஆவணத்தின் மேவி- கடைவீதியை அடைந்து. அம்பொன் துவைத்து ஏகும்; துவைத்து-மிதித்து. ஆனின்நிரை துவைத்து ஏகும் என்க. இத்தலத்தின் ஆவணப்பெருமை பின்னும் கூறப்படும்; **14.**

இது பாங்கி தலைமகனை வேண்டல். (5)

6. வித்துரு மத்தியல் பற்றித ழாரை விரும்புமைந்து
சத்துரு மத்தியஞ் சாருமென் னெஞ்சுன் சரணபற்றுமோ
முத்துரு மத்திய வண்ணப் பொறிகொண் முகத்துமுகி
லொத்துரு மத்தியன் றீர்ந்தாய் மயிலையி லுத்தமனே.

**(கு-ரை.)** வித்துருமத்து இயல்-பவழத்தினது செந்நிறத்தை. ஐந்து சத்துருமத்தியம்-ஐந்து புலன்களாகிய பகைவர்களின் இடையே. ஐந்து சத்துரு.... பற்றுமோ: *''ஓரவொட் டாரொன்றை யுன்னவொட் டார்மலரிட்டுனதாள், சேரவொட் டாரைவர்''* **(கந்தரலங்காரம்,** 4.) முத்து உரு-முத்தைப் போன்ற வடிவத்தையும், மத்திய வண்ணம்-கள்ளைப் போன்ற நிறத்தையும் உடைய; யானைகளின் முகத்திலுள்ள பொறிகளின் வடிவத்திற்கு முத்தும் அவற்றின் நிறத்திற்குக் கள்ளும் உவமை. முகில் ஒத்து உரும் அத்தி அன்று ஈர்ந்தாய்-மேகத்தை ஒத்து முழங்குகின்ற யானையை அக்

காலத்துப் பிளந்து உரித்தாய்; இச்சரித்திரத்தை **மாயூரப் புராணம்,** யானையுரித்த படலத்தாலுணர்க.

யானையை ஈர்ந்தீராதலின் ஐம்புலன்களாகிய வேழத்தை அடக்குதல் உமக்கு எளிது என்றபடி. புலன்களை யானை யாக உருவகித்தலை, ''உரனென்னுந் தோட்டியா னோரைந் துங்காப்பான்'' (**திருக்குறள்**, 24), ''ஐம்புல வேழத்தின் வெந்தொழில்'' (**ஞானாமிர்தம்**) என்பவற்றாலறிக. (6)

7. உத்தர கங்கையி னோங்கிய பொன்னி யுறுமயிலை
யத்தர கங்கையில் வெண்டலை யேந்திய வையர்முக்க
ணித்தர கங்கை தவமறு பத்தி நிறைந்திடுசை
வத்தர கங்கயி லைக்கிரி நான்மறை மத்தகமே.

**(கு-ரை.)** உத்தரகங்கையின் ஓங்கிய பொன்னி-வடக்கேயுள்ள கங்கையைப் போல உயர்ச்சியுற்ற காவிரிநதி; காவிரி தென்றிசைக் கங்கையென்று கூறப்படும்; ''இயன்ற பாவ நீறதா யுகத்துரக்கு மாயூரக் காவிரியை நெடுநீர்க் கங்கை, ஆறுமே விப்படியுந் தென்றிசைக்கங் கையைநாளு மகத்துள் வைப்பாம்'' (**பழைய மாயூரப் புராணம்.**) இனி உத்தரகங்கையின் ஓங்கிய பொன்னியென்பதற்கு ஐப்பசி மாதத்திற் கங்கை வந்து இங்கே உள்ள இடபதீர்த்தக் கட்டத் தில் நீராடித் தன்பாலுள்ள பாவங்களைத் தீர்த்துக்கொண்டு செல்கின்றதென்பது புராண வரலாறாதலின், வடகங் கையைக் காட்டிலும் ஓங்கிய பொன்னியென்று பொருள் கொள்ளுதலும் பொருந்தும்; ''நதிநதமு நதிபதியு நபப்புனலு மற்றுமுள நாரம் யாவுந், துதிகெழுவப் படிந்தாடித் தாமீட்டும் பாவமெலாந் தொலைத்துப்போயுங், கதிகெழுநின் மலமாகி யுயிரோம்பு கவேரனருள் கன்னித் தீர்த்தம், மதிசெய்துலாத் தீர்த்தமெனு மிடபதீர்த் தத்தினை யாம் வணக்கஞ் செய்வாம்'' (**மாயூரப்புராணம்,** கடவுள்.) என்பதனாலுணர்க. உத்தர கங்கையினோங்கிய பொன்னி: ''கங்கையிற் புனிதமாய காவிரி'' (**திருமாலை.**) அகங்கையில்-உள்ளங்கையில். வெண்டலை-பிரமகபாலம். அத்தர்... ஐயர்: ''வேதாகமத்தந் தனிற்சேர் மயிலை விமல.'' முக்கண் நித்தர் அகம்-மூன்று கண்களையுடைய நித்தியராகிய பரமசிவன் எழுந்தருளி யிருக்கும் இடங்களாவன. கைதவம்-வஞ்சனை. சைவத்தர் அகம்-சிவநேசமுடையவர்களுடைய மனம். நித்தர் அகம்...

சைவத்தர் அகம்: "மயிலைக், கோவருந் தானவ னாய்நினைப் போர்மனக் கோயிலிலே" *(91)*; "நினைப் பவர்மனங் கோயிலாக் கொண்டவன்" (**தேவாரம்.**) மறைமத்தகம்- மறையின் தலை.

நித்தருடைய அகங்களாவன சைவத்தரகம் கிரியும் மத்தகமுமாம். *(7)*

8. மேதகி மாலைய நங்கைபங் கார்வரை விற்பிடித்து
மூதகி மாலைய நாணம் பெனக்கொண்டு முப்புரங்காய்
தாதகி மாலையர் தென்மயி லைப்பதிச் சங்கரர்க்கிப்
பாதகி மாலை யனமேசென் றோதிற் பலனுனக்கே.

(**கு-ரை.**) இமாலய நங்கை-பார்வதி தேவியார். வரைவில்-மேருமலையாகிய வில்லை. மூதகி=முதுஅகி- முதுமையை யுடைய பாம்பை. அகியைநாணாகவும் மாலை அம்பாகவுங் கொண்டு; நிரனிறை. மால் ஐய நாண்: ஐய-அழகிய. தாதகிமாலையர்-ஆத்திமாலையை யுடைய வர். திருமயிலாப்பூர் வடமயிலையென்றும் இத்தலம் தென்மயிலையென்றும் கூறப்படும். இப்பாதகிமாலை-இவ ளுடைய மயக்கத்தை. இப்பாதகியென்றது தன்னையே; இறைவனுடைய திருவருளைப் பெறாதிருந்தது பற்றித் தன்னைப் பாதகியென்றாள்.

இது தலைவி அன்னத்தைத் தூதுவிடுதல். *(8)*

9. பலதரங் கந்த மலர்கொண் டரிபணி பாதர்தில்லை
யலதரங் கந்தண் மயிலையி லொன்றுகொண் டாடுமையர்
சலதரங் கந்தவ முஞ்சடை யார்வரைத் தையலுக்குச்
சொலதரங் கந்தர மாகுஞ் சுகங்கிஞ் சுகங்கமுகே.

(**கு-ரை.**) பலதரம்-பலமுறை; தரம்-முறை; "ஒருதரங் கத்தும் பொழுதும்" (**திருவேங்கடத்தந்தாதி,** *9.*) அரிபணி-திருமால் பணிகின்ற. அரிகந்தமலர்கொண்டு பல தரம்பணி பாதரென்க. தில்லையலது-தில்லைவனத்தை யன்றி. இத்தலத்தில் அம்பிகை மயில் வடிவம் நீங்கியபின்பு ஒரு சபையை உண்டாக்கி அதில் தாம் திருநடனம் செய்து தரிசிக்கச் செய்தமையின், அரங்கம் தண்மயிலையிலொன்று கொண்டாடும் ஐயரென்றார். இந்த நடனம், "மயிலைப்பர னன்றுமன்றுட், கோதி னடந்தக வாடினன்", "நடனஞ்

சமுகந் தருக்குறச் செய்திடு நாதனும்'' என்று பின்னும் (67, 68) கூறப்படும். சலதரங்கம்-அலைகளையுடைய கங்கை நீர். சொல் அதரம் கந்தரம்; சொல் சுகம், அதரம் கிஞ்சுகம், கந்தரம் கமுகு; இது நிரனிறை.

இஃது இயலிடங் கூறல். (9)

10. சுகத்தினந் தத்துவண் காவார் மயிலையிற் றூயன்மத
முகத்தினந் தத்துவக் கன்றுரித் தோனுமை காணவிந்தச்
சகத்தினந் தத்துவந் தாடும் பிரான்றனைத் தள்ளிச்செய்த
மகத்தினந் தத்து வருந்தின மாக்கினன் மாமனுக்கே.

**(கு-ரை.)** சுகத்து இனம் தத்து-கிளிக்கூட்டங்கள் தத்திச் செல்கின்ற. மதம் உகு அத்தி நந்த-மதம் சிந்தும் கையினையுடைய யானை கெட; அத்தி-கையையுடையது. யானைக்கு மதம் பிறக்கும் இடங்களுள் துதிக்கையும் ஒன்று. துவக்கு-தோல். சகத்தின் அந்தத்து உவந்து ஆடும்-உலக சங்கார காலத்தில் மகிழ்ந்து ஆடுகின்ற.

சகத்தின் அந்தத்து ஆடுதல்: ''படுபறை பலவியம்பப் பல்லுருவம் பெயர்த்துநீ, கொடுகொட்டி யாடுங்கால்'' (**கலி.** கடவுள். 5-6.) மகத்தினம்-யாகஞ்செய்யும் தினம். தத்துவரும் தினம்-ஆபத்து வருநாள்; ''உழித்தத்தைச் செய்தன்றிப் போகாவினையை'' (**அழகரந்தாதி**, 90.) மாமனுக்கு-தக்கனுக்கு. தக்கன் இறைவனைநீக்கி யாகஞ் செய்ததும் சிவபெருமான் வீரபத்திரரைக் கொண்டு யாகத்தை அழித்த வரலாறும் **மாயூரப்புராணம்**, யாகசங்காரப் படலத்தாலறியலாகும். இது நடந்த தலம் **திருப்பறியலூர் வீரட்டானம்**.(10)

11. மாயூர நாத மயிலையி லீச வரியரவக்
கேயூர நாத சொரூபாவென் னெஞ்சமுன் கிஞ்சுகத்தாண்
மீயூர நாதசன் மாவணங் கற்புத வெவ்வினையா
னோயூர நாதனை நீயருட் கண்கொண்டு நோக்குகவே.

**(கு-ரை.)** மாயூரநாத-கௌரியாகிய மயிலுக்கு நாதரே. அரவக்கேயூர-பாம்பாகிய தோள்வளையையுடையீர். கிஞ்சுகத்தாள்-முள்ளுமுருங்கைப்பூவைப் போன்ற சிவந்த திருவடியின். மீ ஊர-மேலேசெல்ல. என்நெஞ்சம் ஊரவென இயைக்க. நாதசன்மா: ஓரந்தணர்: இவரும் இவர் பத்தினியாராகிய அநவித்தையும் ஸ்ரீமாயூரநாதரை வழிபட்டுச்

சண்டேசுவர சண்டேசுவரி பதவிகட்கு மேலான பதவியை இத்தலத்தில் பெற்றார்கள். அநாதனை-பாதுகாப்போர் இல்லாத அடியேனை; "அநாதர்களாயுனையடையுமவர்" (**சேது புராணம்**, கவிசம்பு. 67.) வெவ்வினை.... நோக்குக: "வெவ்வினைதீர்த்து... கருணைப் பார்வை யென்மிசை வைத்தருளே" என்பர் பின்னும்; 14. *(11)*

12. வேதாக மத்தந்த மேவுமத் தாபலி வேண்டியன்று
வேதாக மத்தந் தனிற்சேர் மயிலை விமலசெம்பொற்
போதாக மத்தந் தரித்தோய் கருணை புரியுயிர்போம்
போதாக மத்தந் தமர்மீதி லாசையைப் போக்குவித்தே.

**(கு-ரை.)** வேத ஆகமத்து அந்தம் மேவும்; அந்தம்-முடிவு. வேதாகம் அத்தம்தனில்சேர்-பிரமதேவனுடைய தலை திருக்கரத்திற் சேரப்பெற்ற. மத்தம்- ஊமத்தம்பூ;. மத்தத்தைச் செம்பொற் போதாகத்தரித்தோய். உயிர் போம்போது ஆகம் தமர் அத்தம் மீதில் ஆசையைப் போக்குவித்துக் கருணைபுரியென்க. ஆகம் அத்தம் தமர்-உடல், பொருள், உறவினர். உயிர்போம் போது கருணை புரி: "தனுபங்குரசமையத் தபயந்தமி யேற்குக் கொடுத்தருளே" என்பர் பின்னும்; 54. *(12)*

13. போக்கவ ராதியை காமா தியைநின் புகழ்ப்பெயரை
நாக்கவ ராதியல் பாநன் நெறியி னடக்கவரா
தூக்கவ ராதிய ரூர்காய் மயிலையி லுத்தமனே
நீக்கவ ராதி யெனினுஞ் சரண்புகென் னீள்வினையே.

**(கு-ரை.)** இயை காமாதியைப் போக்க வராது; வராது-ஆற்றல் வராது; ஆற்றலில்லை என்றபடி. ஊக்க அராதியர் ஊர்-உள்ளக்கிளர்ச்சியையுடைய பகைவர்களாகிய அசுரர்களுடைய முப்புரங்களை. அவராதி-அபராதி-குற்றஞ் செய்தவன். சரண்புகு என். அவராதியெனினும் என் வினையை நீக்கு என்க. *(13)*

14. நீளா வணங்க ணெருங்கு மயிலை நிமலவுனக்
காளா வணங்கல னாயினுந் தொல்லை யடியனென்றே
மீளா வணங்கனல் வெவ்வினை தீர்த்தினி மேற்பிறந்து
மாளா வணங்கரு ணைப்பார்வை யென்மிசை வைத்தருளே.

**(கு-ரை.)** நீள் ஆவணங்கள்-நீண்ட கடைத்தெருக்கள். ஆளா-அடிமையாக. தொல்லை அடியன்-பழைய அடியவன்யான்; "ஐயா பழவடியோம்" (**திருவாசகம்**); "என்றுநீயன்றுநா னுன்னடிமை யல்லவோ" (**தாயுமானவர்.**) மீளா-மீட்டு. அணங்கு அனல்-வருத்துகின்ற நெருப்பைப் போன்ற; அனல்-அனலுகின்ற எனினும் பொருந்தும். பிறந்து மாளாவண்ணம் மீளா வைத்து அருளென்க. *(14)*

15. வைத்தச னங்கள் பெறும்பணி பூணு மயிலைப்பிரான்
பத்தச னங்கரு தும்பரன் வெற்பிற் பவளச்செவ்வாய்ப்
புத்தச னங்கவர் தற்குநல் வேளையிப் போதென்கொலோ
சித்தச னங்கனை யன்னீ ருமது திருவுள்ளமே.

**(கு-ரை.)** வை தசனங்கள்-கூர்மையாகிய பற்கள். பாம்பின்விடப் பல், காளி, காளாத்திரி, யமன், யமதூதியென நான்காதலிற் பன்மையாற் கூறினார் (**சீவக.** 1288-ஆம் பாடலினுரையைப் பார்க்க.) பத்தசனம்-அடியார் குழாம். புத்தசனம்-புதுஅசனம்-புதிய உணவு, விருந்து; குறிப்பு. இப்போது கவர்தற்கு நல்வேளை. சித்தசன் அங்கனை-மன்மதனுடைய மனைவியாகிய ரதியை. உமது திருவுள்ளம் என்கொலோ என்க.

இது தலைவன் தலைவியை வேண்டல். *(15)*

16. திருமயி லைப்பதி யைப்பிறை மோலி திகழ்வள்ளலும்
பொருமயி லைப்பதி கண்ணஞ்சன் மாதும் பொருந்திவைகும்
பெருமயி லைப்பதி தன்சே ரினுமுத்திப் பேறவனுக்
கருமயி லைப்பதி னெண்பதி புக்குமங் காவதென்னே.

**(கு-ரை.)** மயிலைப்பதியை-மயிலையாகிய தலத்தை. பிறைமோலி-பிறையாகிய கிரீடம்; "மௌலியாய தூமேவு பிறை" என்பர். (**திருநாகைக்காரோண புராணம்,** விநாயக.) மௌலி, மோலியெனவும் வழங்கும். சந்திர மௌலீசரென்னும் திருநாமமும் இதனைப் புலப்படுத்தும். பொரும் அயிலைபதி கண்-பொருகின்ற வேலைப்பதித்தாற்போன்ற கண்களையுடைய. அஞ்சல் மாது-அஞ்சல் நாயகி; இஃது இத்தலத்திலுள்ள அம்பிகையின் திருநாமம்; "மயிலாடுதுறை, அஞ்சலாளுமைபங்கன்" (**தேவாரம்.**) இப்பெயர் அஞ்சலையெனவும் வழங்கப்படுகின்றது. பெருமயிலை=

பெருமை இல்லை-பெருமையையுடைய இடத்தை. பதிதன்-நடைவழுவினவன்; "விதிமரபு மாசிரம மெய்ந்நெறியும் விடுத்தழிந்த, பதிதனைநீ விடுதி" (**சேதுபுராணம்,** கவிசம்பு. 30.) மயிலைப்பதியை இல்லைப் பதிதன் சேரினுமென்க. அருமயிலை=அருமை இலை-அருமை இல்லையாகும்; எளிதிற் கிடைக்கும் என்றபடி. பதினெண்பதிபுக்கும்-பதினெண்மொழி வழங்கும் தேயங்களில் யாத்திரையாகச் சஞ்சரித்தும். அங்கு ஆவது என்-அங்கே உண்டாகும் பயன் யாது. (16)

17. ஆவினி லாவந்தி வந்தா லெனக்கணங் கேயதன்பின்
பாவினி லாவந்திவ் வூரிலென் செய்யும் பயிரைமென்று
காவினி லாவந் தியங்கி யுறங்குங் கவின்மயிலைக்
கோவினி லாவந் தினம்பெறு நீத்தெறி கொன்றையுமே.

(**கு-ரை.**) அந்திவந்தால் எனக்கு ஆவிநில்லாது. நிலா: தொகுத்தல் விகாரம். பாவிநிலாவந்து-பாவியாகிய நிலாவும் தென்றற்காற்றும். காவினில் ஆவந்து இயங்கி. மயிலைக் கோவின்-மாயூரநாதரால். இலாவம்-இலாபத்தை. பிறரால ணியப்படாத கொன்றையும் சிவபெருமானால் அணியப் படும் பேறுபெறும். கொன்றைபிறரால் அணியப்படாததை, "கோங்க லரும்பொழின் மாலிருஞ் சோலையிற் கொன்றை கண்மேற், றூங்குபொன் மாலைக ளோடுட னாய்நின்று தூங்கு கின்றேன்" (**நாச்சியார் திருமொழி**) என்பதனாலறியலாம்.

இது தலைவியின் கூற்று. (17)

18. கொன்றத்தி யங்கதன் றோல்போர்த்த மெய்யனெங் கோன்மயிலைக்
குன்றத்தி யங்கவ் வணங்கையன் பன்கொடுங் கானின்மென்றாள்
கன்றத்தி யங்க மனங்கொடு செல்கின்ற காரணத்தா
லின்றத்தி யங்கலி போலெம ராலித் திரங்குவரே.

(**கு-ரை.**) அத்தியைக்கொன்று அங்கு அதன் தோல் போர்த்த மெய்யன். மயிலை குன்றத்து இயங்கு. அவ் அணங்கை. தாள்கன்றவும் மனம் தியங்கவும். இன்று அத்தி அம்கலிபோல்; அத்தி-கடல்; கலி-ஓசை. ஆலித்து-முழங்கி.

இது கண்டோர் கூற்று. (18)

19. இரவல ராவன சத்தையிந் நேரத் திதழ்திறந்து
தரவல ராதவ ராகுவ ரோபொற் சரோருகத்தின்

விரவல ரார்குழன் மின்னேயெவ் வாறிங்கு மேவினைநீ
ளுரவல ராவணி தோளார் மயிலை யுயர்வரைக்கே.

**(கு-ரை.)** இரவு அலரா வனசத்தை-இரவில் மலராத தாமரைப் பூவை. இதழ் திறந்து தர-மலர்த்துதற்கு. ஆதவர் தரவல்லர் ஆகுவரோ. பொற்சரோருகத்தில் விரவுமின்னே. இங்கு எவ்வாறுமேவினை. உரம் வல்அரா அணி தோளார்-மிக்க வன்மையையுடைய பாம்பையணிந்த தோளையுடையவர்; "விரியரவக் கேயூர நாத"என்றார் முன்னும்; *11*. வரைக்கு-வரையின்கண்; உருபுமயக்கம்.

தலைமகளைத் திருமகளாகப் பாவித்துத் தலைவன் கூறியது. இச்செய்யுள், "காமரை வென்றகண் ணோன்றில் லைப் பல்கதி ரோனடைத்த, தாமரை யில்லினிதழ்க்கத வந்திறந் தோதமியே, பாமரை மேகலை பற்றிச் சிலம்பொதுக் கிப்பையவே, நாமரை யாமத்தென் னோவந்து வைகி நயந்ததுவே" **(திருச்சிற்.)** என்னும் செய்யுளின் கருத்தை யடியொற்றி வந்தது. *(19)*

20. உயரையி ராவண வாகனத் தோன்முத லும்பருற்ற
துயரையி ராவண நீக்கவி ராமனைத் தோற்றியிலங்
கயரையி ராவண னோடு வதைப்பித்த கார்க்களத்தெண்
புயரையி ராவண நீள்கா மயிலையிற் போற்றுநெஞ்சே.

**(கு-ரை.)** உயர் அயிராவண வாகனத்தோன்; அயிராவணம்-ஐராவதம்; துயரை இராவண்ணம் நீக்க. இலங்கயரை=இலங்கையரை-இலங்காபுரியிலுள்ள அரக்கர்களை. கார்க்களத்து எண்புயரை-கரியகண்டத்தையும் எட்டுத் தோள்களையுமுடையவரை; கார்க்களம்-மேகம் போன்ற களமெனினும் ஆம். இராவண்ணம் நீள்கா-இராத்திரியின் தன்மை மிகப் பெற்ற சோலை; இருண்ட சோலை யென்றபடி. இச்செய்யுளிற் பின்மூன்றடித் திரிபிலுள்ள சொற்கள் இப்படியே, "இராவண விராவண னிராவண மறுத்தோன்" **(அழகர் கலம்பகம்**,*48)* என்பதிலும் தொடர்ந்து வந்துள்ளன. இச்செய்யுளில் ஒரேகதையை மூன்றடியில் தொடர்ச்சிபெறத் திரிபில் அமைத்தது கவிவன்மையைக் காட்டுகின்றது. *(20)*

21. சேவாக னத்தன் மயிலையி லீசன் சிவையொருபான்
மேவாக னத்த னருளுஞ் செயுநல் வினையுமன்றிச்

சாவாக னத்தம் வரினெஞ்ச மேநந் தமைப்பரிந்து
காவாக னத்த பொருளுங் கிளையுங் கலன்களுமே.

*(கு-ரை.)* சே-விருஷபம். சிவை-உமாதேவியார். ஒருபால் மேவு ஆகன். சாவு ஆகு அனத்தம்-மரணமாகிய அபாயம்; அனத்தம்: "தாழ்மலபா தாளத் தனத்தத்தை" ***(திருவரங்கத்தந்தாதி.)*** காவா-பாதுகாப்பன அல்ல. கலன்கள்-ஆபரணங்கள். அத்தன் அருளும் நல்வினையுமன்றிப் பொருளும் கிளையும் கலன்களும் காவா என்க. *(21)*

22. கலசங் கரிக்கும்ப மென்னுந் தனக்கங்கை காந்தர்வரைக்
குலசங் கரிக்குங் கொழுநர்கற் பாந்தங் குறுகிலண்டம்
பலசங் கரிக்கும் பரனார் பிரமன் பணிமயிலைத்
தலசங் கரிக்கு மதனைவென் றோர்பர தத்துவமே.

*(கு-ரை.)* கலசமும் கரிக்கும்பமும்; கலசம்... தனம்; "கலைய மலைக்குங் கவின்முலை" *(40.)* கும்பம்-மத்தகம். காந்தர்-தலைவர். வரைக்குல சங்கரி; வரை-இமயமலை. சங்கரிக்கும்: உம்மை இறந்தது தழீஇயது. கற்பாந்தம்-பிரளயகாலம். அண்டம் பல சங்கரிக்கும்-பல அண்டங்களை அழிக்கும். மயிலைத்தலசங்கர்-மயிலைத் தலத்தின் கண் பற்றையுடையார். இக்கு-கரும்பு. பரதத்துவம்-மேலானபொருள்.

*பிரமன் பணிமயிலை:* இத்தலத்திற் பிரமன் பூசித்துப் பேறு பெற்றான்; அதனாற் பிரமபுரமென்றும் ஒரு பெயருண்டென்பர்; இதனை **மாயூரப்புராணத்திற்** பிரமன் சிருட்டிபெறுபடலத்தா லறியலாகும். *(22)*

23. துவள வளைக்கும் வரைவில்லர் பொன்னித் துறையிலெங்குந்
தவள வளைக்குல முத்தீன் மயிலைத் தடவரைவாய்ப்
பவள வளைக்குழைக் காதோ டிகல்விழிப் பாங்கியெனு
மிவள வளைக்குறி மேவற்கு வாயி லினிநமக்கே.

*(கு-ரை.)* வரைவில்லர் - மேருமலையை வில்லாக உடையார். பொன்னி - காவிரி. தவளம் வளைக்குலம் - வெண்மையாகிய சங்கின் கூட்டங்கள். முத்து ஈன் - முத்துக்களைப் பெறுகின்ற. வில்லருடைய மயிலையென்க. வரை - மலையில். வாய்ப்பவளம் - வாயாகிய பவளம். வளைக்குழைக்காது - வள்ளைக்கொடிபோன்ற குண்ட

லத்தை யணிந்த காது. வாய்ப்பவளத்தையும் விழியை யுமுடைய இவள். அவளைக்குறிமேவற்கு இவள்வாயில். அவள்என்றது தலைவியை. குறி - குறியிடத்தில். வாயில் - வழி.

இது தலைவன்வாயில்பெற்று உய்தல். (23)

24. இனியன கைக்கு மிளநில வங்கி யெனச்சுடுமென்
சனியன கைக்கும் வளைகணில் லாவெனுந் தையலைத்தாய்
முனியன கைக்குமிவ் வூர்தணிப் பாயிவண் மோகத்தைநீ
தனியன கைக்கும ணாளா மயிலையிற் சங்கரனே.

**(கு-ரை).** இனியன கைக்கும் - இனிய சுவையையுடைய உணவுப் பொருள்கள் கசக்கும். நிலவு சுடும். அங்கி - அக்கினி. என்சனியன் அகைக்கும் - என்னைப் பிடித்த சனியென்னும் கோள் வருத்துவான். எனும் - என்று சொல்லு கின்ற. தாய்முனிய இவ்வூர் நகைக்கும். இவள்மோகத்தை நீ தணிப்பாய். தனி அனகைக்கு - ஒப்பற்ற உமாதேவியாருக்கு. இத்தலத்தில் அம்பிகை மயில் வடிவம்நீங்கி இயற்கைவடிவ முற்றபோது **ஸ்ரீமாயூரநாதர்** மணவாளக்கோலம் பூண்டு திருமணம் செய்துகொண்டமையின் 'அநகைக்கு மணாளா' என்றார்; ''அமலைக்கு மணாளர்'' என்பர் பின்னும்; 40. இதனை, **மாயூரப்புராணத்தில்** திருமணப்படலத்தாலறிக. ''மயிலாடு துறையுறையு மணாளனாரும்'' **(திருநா. தே)** அநகைக்கு மணாளாவென்றது கருத்துடையடை.

இது பாங்கிகூற்று. (24)

25. சங்கத்தி னந்தவழ் செய்சூழ் மயிலைத் தலத்துறைவோர்
பொங்கத்தி னந்த வுரித்தார் வரையில்விண் பூவையர்நும்
மங்கத்தி னந்த மிலரே தவரு மவர்கனிவாய்
நுங்கத்தி னந்தவஞ் செய்யார் கிடைத்திடி னும்மிதழே.

**(கு-ரை.)** சங்கத்து இனம்தவழ். பொங்கு அத்தி நந்த உரித்தார் - சினமிகுந்துவந்த யானை கெடும்படி அதனை உரித் தவர். விண்பூவையர் - தெய்வ மங்கையர். நும் அங்கத்தின் அந்தம் இலர். நும் என்றது தலைவியை. அந்தம் - அழகு. விண்பூவையர் அந்தம் இலர். தவரும் - முனிவர்களும். நுங்க- உண்ண. நும் இதழ்கிடைத்திடின், தவஞ்செய்யார்.

இது தலைவன் தலைவியைப் புகழ்தல். (25)

26. நுமருக மானனை யார்தந்த காமவெந் நோயுரைத்தல்
கமருக மான தினிமட லேகதி காணயனா
ரமருக மான வரிக்கொரு நாளென் றமைத்துவைத்த
தமருக மானமர் கையார் மயிலைச் சயிலமின்னே.

**(கு-ரை.)** நும் அருகு அ மான் அனையார்; நும் அருகு- உம்மிடத்தே; அம்மான் அனையாரென்றது தலைவியை. நோயை நும் அருகு யான் உரைத்தல். கமர் உகு அம் ஆனது- வெடிப்பிற் சிந்துகின்ற நீர்போலப் பயனிலதாயிற்று. ஆதலால் என ஒருசொல் வருவிக்க. இனி மடலேகதி- இனிமேல் பனைமடல் மாவூர்ந்து வீதிக்கண் வருதலே எனக்குப் பற்றுக்கோடாகும்; மடலூர்வேனென்றபடி. காண்: அசை. அயனார் அமர் உகம் ஆன அரிக்கு ஒரு நாளென்று- பிரமதேவருடைய வாழ்நாட்களாகிய யுகங்களானவை திருமாலுக்கு ஒருநாளாக; "கோடிவிதி மாளிற் குலாவுகம லக்கண்ண, னேடி வடவாலுறங்குமே" **(அருணகிரியந்தாதி.)** தமருகமும் மானும் அமரும் கையார். சயிலம் - மலை.

இது தலைவன் மடலேறுவேனென்றல். *(26)*

27. மின்னக ரும்பணி பூண்டமின் னேமலர் வேண்டுதியேற்
பொன்னக ரும்பணி தென்னார் மயிலைப் புனிதர்வெற்பிற்
பன்னக ரும்பணி கேட்குந் தகைத்துப் படுத்தபனை
யன்னக ரும்பணி யொன்றுகண் டேனங் கணுகற்கவே.

**(கு - ரை.)** மின் நகரும்பணி - மின்னல் நகர்ந்து வேறிடஞ் செல்லுதற்குக் காரணமாகிய ஆபரணத்தை; நகர்தல் - புடைபெயர்தல்; "நகராநல ஞான சம்பந்தன்" **(தே.)** பொன்நகரும் பணி - தேவலோகமும் வணங்குகின்ற. தென் ஆர் -அழகு நிறைந்த; தெங்கு நிறைந்த எனலுமாம். பன்ன கரும் பணிகேட்கும் - நாகலோகத்தாரும் ஏவல்கேட்கும். படுத்த - வெட்டிச்சாய்த்த. பனை அன்ன கரும்பணி ஒன்று - பனையையொத்த கரும்பாம்பு ஒன்றை; "பனையினீளுடற் பணிகள்" **வில்லிபாரதம்,** காண்டவதகனச்.

இது பாங்கி தலைவிக்குக் குறிபெயர்த்துரைத்தல். *(27)*

28. கற்பம ருங்கலை யென்றே குதலொழி காண்மயிலைச்
சற்பம ருங்கலை யாறுந் தரித்த சடிலர்வெற்பா
பொற்பம ருங்கலை கொள்வா னிராமனைப் போதியென்ற
சொற்பம ருங்கலை சீதைமுன் னுற்ற துயர்பெரிதே.

(**கு-ரை.**) கற்பம் அரும் கலை - அரியகலைகளைக் கற்றுக்கொள்வோம். காண்: அசை. சற்பம்மருங்கு - பாம்பின் அயலில்; "சற்பமா முருவர் போற்றித் தாழ்ந்தனர்" (**சேதுபுராணம்,** தோத்திர. 61) சடிலர் - சடையையுடையவர். பொற்பு அமரும் கலைகொள்வான் - அழகு பொருந்திய (மாரீசனாகிய) மானைக் கொள்ளும்பொருட்டு; கலை: சிலேடை. போதி - போவாய். சொற்பம் மருங்கு அலை - நுண்ணிதாயிருக்கிற இடை துவளுகின்ற; "சொற்ப கலாமதி" 4.

வெற்பா ஏகுதலொழி யென்க.
இது பாங்கி ஓதற்பிரிவு விலக்கல். *(28)*

29. துயருந்தி யங்குயில் கூவுமென் றங்கை துணைச்செவிபோர்த்
தயருந்தி யங்கு மழுமாலிம் மானுக் கருள்கிலையா
லுயருந்தி யங்குசப் பன்மந்தி காவி னொழுகுமது
வையருந்தி யங்குண் மயங்கு மயிலை மழுவலனே.

(**கு-ரை.**) துயர் உந்து இயம் - துயரத்தைச் செலுத்தும் வாத்தியமாக; இயம் - காளம்; "குயிற் கூவியம்" (5) துயுர் உந்தி அம் குயில் கூவும் எனலும் ஆம். துணைச்செவி - இரண்டுகாதுகளையும். போர்த்து - பொத்தி. அயரும் - வருந்துவாள். உயர் உந்தி - உயர்ந்த கொப்பூழையும். அங்கு சப்பல் மந்தி - தோட்டிபோன்ற கூரியபல்லையுமுடைய குரங்கு; "மடலுளி யங்குசப் பல்லுகிர் வேங்கை" (99) என அங்குசத்தைப் புலிநகத்திற்கும் உவமை கூறுவர். காவின் ஒழுகும் மதுவை அருந்தி; மது - தேன். அங்கு உள் மயங்கும். மழுவலனே அருள்கிலை.

இது பாங்கிதலைவியின் காமமிக உரைத்தல். *(29)*

30. வலவரு மைக்கு மருகர் மலைக்கு மயிலையுள்ளார்
குலவரு மைக்கும ரற்கையர் நன்மலர் கொண்டுவிண்ணோர்
பலவரு மைக்குல வாகன னும்பணி பாதர்பெயர்
சொலவரு மைக்குழ லிந்திரை கேள்வன் றுரைத்தனமே.

(**கு-ரை.**) வலவர் உமைக்கு - உமாதேவியாருக்கு வலப்பாகத்திலுள்ளார்; வலவர் - வல்லபரென்பதன் திரிபும் ஆம்; வல்லபர் - நாயகர்; "பிராண வல்லபன்" (**தக்க.** 657. உரை) குலவு அருமைக் குமரற்கு; குமரற்கு - முருகக் கடவுளுக்கு; குல அருமை எனினும் ஆம். ஐயர் - திருத்

தந்தையார். விண்ணோர் பலவரும் - தேவர்கள் பல்லோரும். மைக்குலவாகனன் - இந்திரன்; மை - மேகம். பெயர்சொல - திருநாமத்தை உச்சரிக்க. இந்திரை - திருமகள். துரைத்தனம் - அரசாட்சி; தனம் -தன்மை; "சாரத்தனம்" (46); "வள்ளற்றனமும் வகுத்தனன் கூறி" (**பெருங்.** 5.8:6); "வள்ளற்றன மென்னுயிரை மாய்க்கு மாய்க்கு மென்றான்" (**கம்ப.** நகர் நீங்கு. 62) துரைத்தனம் வரும்.

இந்நூல் 90-ஆம் செய்யுள் இதன் கருத்தை ஒருவாறு ஒத்துள்ளது. (30)

31. தனங்காத் திரமைய நுண்ணிடை சைவலந் தாரளக
மனங்காத் திரமை யரிக்கண் முகமம் புயமதிமோ
கனங்காத் திரமைய செய்யார் மயிலைக் கடவுள்வெற்பிற்
புனங்காத் திரமை யமைந்தாங் கிருந்தவப் பூங்கொடிக்கே.

**(கு-ரை.)** தனம் காத்திரம் - கொங்கை பெரியது. ஐயம் நுண்ணிடை; ஐயம் - சந்தேகம். அனங்காத்திரம் = அனங்க அத்திரம் - மன்மதன் அம்புகள். அதிமோகனம் காத்திரம் - மிக்க விருப்பத்தைச்செய்வது உடம்பு. ஐய - பாங்கனே; அழகிய எனினும் ஆம். செய் -வயல். புனம்காத்து - தினைக்கொல்லையைக் காத்து. இரமை - திருமகள். இரமை புனம் காத்து அமைந்தாங்கு.

இது பாங்கனுக்குத் தலைவன் இயலிடங்கூறல். (31)

32. பூங்காவி யம்புவில் வேள்விடும் போதுயிர் போங்கரையிற்
றேங்காவி யம்பு கவிழ்ந்தாங் கெனவிவள் செய்தியைநீ
பாங்காவி யம்புக வண்டே மனையிற் பழகுகிள்ளை
தாங்காவி யம்புகன் மாமயி லைப்பரன் சந்நிதிக்கே.

**(கு-ரை.)** வில்வேள் பூங்காவி அம்பு விடும்போது. உயிர்போம் - உயிர் போகும். கரையில் தேங்கு ஆவி அம்பு கவிழ்ந்தாங்கு - கரையினால் நிறைந்திருக்கப் பெற்ற குளத்திலுள்ள நீர் உடைந்து சென்றாற்போல. கவிழ்ந்தாங்கு உயிர்போம் என்க. வண்டே பாங்கா இயம்புக; பாங்கா - அழகாக; அமயம் பார்த்துச்சொல் என்றபடி. கிள்ளைதாம் காவியம் புகல். சந்நிதிக்கு - திருமுன்பு.

சந்நிதிக்கு இயம்புக என்க.
இது வண்டுவிடுதூது. (32)

33. சன்னத்த னாகச் சமர்க்கெய்து மாரன் சரங்களைந்து
மென்னத்த னாகத் தெழுந்திங் களுமெனை யென்செயுங்கா
ணன்னத்த னாக சயனத்த னேத்து மரன்மயிலை
மன்னத்த னாகத்து மாலையு மாலைக்குள் வந்திடினே.

**(கு-ரை.)** சன்னத்தனாக - ஆயத்தனாக; "சன்னத்த னாகித் தனுவேந்துதற் கேதுவென்றுன்" (**கம்ப.** நகர்நீங்கு. *126*); "*சன்னத்த னானா லெவர்வந்து சமர்க்கெதிர்ப்பார்*" (**பிரபோத.** *26: 99.*) சரங்கள் ஐந்தும் - ஐந்துபாணங்களும்; இவற்றை, "மாம்பூ வசோகப்பூ தாமரைப்பூ முல்லைப்பூ, தேம்பாய் தருகுவளைச் செவ்விப்பூ - மேம்பட்ட, மைந்துபூண் மார்ப மதனன் கணையான, வைந்துபூ வாகு மவை" என்பதனால் அறியலாம். எல் நந்த நாகத்து எழும் திங்களும் - ஒளி பெருக ஆகாயத்தில் உதிக்கும் சந்திரனும்; எல் நந்த - சூரியன் அத்தமிக்கவெனலும்ஆம்; நத்த: வலித்தல் விகாரம். காண்: அசை நிலை. அன்னத்தன் நாகசயனத்தன் ஏத்தும் அரன். மயிலையில் மன்னிய அத்தன். ஆகத்து - திருமார்பிலுள்ள. மாலைக்குள் - மாலைப்பொழுதிற்குள்; மாலைக் காலம் வரும் முன்னேயென்றவாறு. மாலையும்: உம்மை அசைநிலை.

மாலைவந்திடின் சரங்கள் ஐந்தும் திங்களும் என்செயும்.

பிரமனும் திருமாலும் பூசித்த தலம் இதுவாகலின் 'அன்னத்தனாக சயனத்த னேத்துமரன்' என்றார்.

இது தலைவன் நீடத் தலைவி வருந்தல். *(33)*

34. வந்தநஞ் சாரலின் மையுறு கண்டர் மயிலைவெற்பி
லிந்தநஞ் சாரலி லெண்ணில ரேமுன் னிரந்தவர்கோ
விந்தநஞ் சாரலின் மெய்த்தவஞ் செய்யினு மேவரிதா
நுந்தநஞ் சார லிவர்க்கெளி தாகவென் னோற்றனரே.

**(கு-ரை.)** வந்த நஞ்சு ஆரலின் - கடலிற்றோன்றிய விடத்தை உண்டமையால். இந்த நம் சாரலில்; சாரல் - மலைப்பக்கம். முன் இரந்தவர் - முன்பு மகட் பேசினோர். இரந்தவர் எண்ணிலரென இயைக்க. கோவிந்தன் அஞ்சு ஆரலின்மெய்த்தவம் செய்யினும் - திருமால் பஞ்சாக்கினி யினிடையேயிருந்து உண்மையானதவம் செய்தாலும். நும் தனம் சாரல் மேவரிது. இவரென்றது தலைவரை.

இது பாங்கி கூற்று. (34)

35. நோகாம னம்புனல் சோரா விழிமதி நோவியற்ரு
மாகாம னம்பு வருத்தாது தென்றல் வரினுமெய்க்கு
வாகாம னம்புகுஞ் செய்சூழ் மயிலையில் வள்ளல்வந்து
நீகாம னம்புதி நீத்தாங் கியான்றுயர் நீத்தபின்னே.

*(கு-ரை.)* நோகா மனம் - மனம் நோவாது; நோகா: தொகுத்தல் விகாரம். நோவு இயற்றா - துன்பம் செய்யாது. மா காமன் அம்பு. வாகு ஆம் - இன்பத்தைத் தருவதாகும்; வாகு - அமைதி. அனம் புகும்செய்; அனம் - அன்னப் பறவை. வந்து - வரப்பெற்று. நீகாமன் அம்புதி நீத்தாங்கு - மாலுமி கடலைக் கடந்தாற்போல. நீகாமன்: இது நீகானெனவும் நீயானெனவும் வழங்கும்.

இது தலைவனீடத் தலைவி வருந்தல். (35)

36. பின்னலங் காரள கத்தழ கும்பிறை போனுதலு
முன்னலங் கார முலைகளுந் திங்கண் முகமுங்கொண்டே
நென்னலங் காரணி தோளார் மயிலைக்க ணின்றவந்த
மின்னலங் கார வுருவின்று தோன்றும் வெளியெங்குமே.

*(கு-ரை.)* பின்னல் அம் கார் அளகம். முன் அலங்கு ஆரம். நென்னல் அங்கு ஆர் அணி தோளார்; நென்னல் - நேற்று; ஆர் - ஆத்தி. நென்னல் அங்கு நின்றவென இயைக்க. அந்த மின்னென்றது தலைவியை. அலங்காரவுரு - அழகையுடைய வடிவம். கொண்டு தோன்றும் என்க.

இது தலைவன் தலைவியின் உருவெளித்தோற்றம் கண்டு கூறியது. (36)

37. எங்கும கந்தனி வந்ததெ னும்பெய ரேதுரையீர்
குங்கும கந்த முலையீர் சொலிற்குறை வாங்கொலென்பாற்
றங்கும கந்தவிர்த் தாள்வார் தமையன்றித் தக்கன்செய்த
பொங்கும கந்தகர்த் தார்தென் மயிலைப் பொருப்பிடத்தே.

*(கு-ரை.)* எங்கு உம் அகம் - எவ்விடத்துள்ளது உம் முடையவீடு. தனி வந்தது என் நும் பெயர் ஏது. தனிவந்த தென்: "தனித்துநின் றுயென்ன காரணமே" (**வெங்கைக் கோவை,** *8*) குங்குமகந்தம் - குங்குமப்பூ விரவிய சந்தனத்தை யணிந்த. என்பால் தங்கும் அகம்தவிர்த்து; அகம் - பாவம். மகம் தகர்த்தார் - யாகத்தைச் சிதைத்தவர். பலதேவர்களைத் துணைக்கொண்டு மிகுந்த ஆரவாரத்தோடு செய்த

யாகமாதலின், 'பொங்குமகம்' என்றார். மகம் சிதைத்தது திருப்பறியல் வீரட்டத்தில்; இக்கதை **மாயூரப்புராணத்தில்** யாக சங்காரப்படலத்திற் கூறப்பட்டுள்ளது.

இது தலைவன் தலைவியை முன்னிலையாக்கல். *(37)*

38. பொருந்தா ரணியெயில் காய்ந்தோன் மயிலைப் புனிதன்வெற்பின்
முருந்தா ரணிநகை மொய்குழற் பேதை முலைவிலைக்கா
விருந்தா ரணிபுய மன்னவ நீபுரக் கின்றவிந்தப்
பெருந்தா ரணிமுழு துந்தரி னும்பெறும் பேறலவே.

**(கு-ரை.)** பொருந்தார் - பகைவர். அணியெயில் - படைவகுப்பினையுடைய மும்மதில்கள். முருந்து ஆர் - மயிலிறகின் அடிக்குருத்தை ஒத்த. பேதையென்றது தலைவியை. இரு தார் அணி புயம் - பெரிய மாலையை அணிந்த தோள்கள். பெருதாரணி முழுதும் - பெரிய பூமி முழுவதையும். அல்ல - அன்று; அல்ல வென்பது ஒன்றன்பாலுக்கும் வரும்; **நேமிநாதத்திற்** காண்க.

இது பாங்கி தலைவியருமை சாற்றல். *(38)*

39. பேரம ருந்துங்க ணம்புபட் டாகம் பிளப்பட்டநோய்
தீரம ருந்துங்கள் செவ்வா யமுதன்றித் தீங்கரும்பின்
சாரம ருந்துங் களிமந்தி தாவுந் தனிமயிலை
யூரம ருந்துங்கர் வெற்பணங் கேபிறி தொன்றிலையே.

**(கு-ரை.)** பேர் அமர் உந்தும் - பெரிய போரைச் செய்கின்ற. பேரமருந்துங்கண்: "பேரமர்க்கண்ணி" (**குறுந்.** *131*), "பெண்டகையாற் பேரமர்க்கட்டு" (**குறள்.** *1083.*) ஆகம் பிள்ளப்பட்ட - மார்பு கிழிபட்ட; ஆகம் -நெஞ்சுமாம். பிளப்பட்ட - பிள்ளப்பட்ட. நோய்தீர் அ மருந்து - நோய் தீருதற்குக் காரணமாகிய அந்த மருந்து. கரும்பின் சாரம் - கருப்பஞ்சாறு. தீங்கரும்பின் சாரமருந்துங் களிமந்தி: "நன்கொடிச்சிக்கை யருந்தரி" என்பர் பின்; 56. மயிலை ஊர் அமரும் துங்கர்; துங்கர் - மேலானவர். அமுதன்றிப் பிறிதொன்றில்லையென இயைக்க.

இச்செய்யுள், "பசும்பொற்குழைநோய், நயனார விந்தத்து நஞ்சுநும் வாயிதழ் நல்லமுதம், அயனார் படைத்தில ரேலடங் காதவ் வரனுக்குமே" (**தஞ்சை.** *135*) என்பதைத் தழுவிவந்தது.

இது தலைவன் கூற்று. *(39)*

40. இலைய மலைக்கு மனமுற யோகத் திருக்கவல்ல
மலைய மலைக்குறு மெய்த்தவன் போற்று மயிலைவள்ளல்
கலைய மலைக்குங் கவின்முலை வேற்கட் கரும்புருவச்
சிலைய மலைக்கும ணாளருண் டென்பவந் தீர்ப்பதற்கே.

(கு-ரை.) அலைக்கும் மனம் இலையம் உற - அலையச் செய்கின்ற மனம் ஒடுங்குதலை அடைய. மலையமலை - பொதியில்மலை. குறுமெய்த்தவன் - அகத்தியர். கலையம் மலைக்கும் - கலசம் மயங்கும், கலசத்தோடு மாறுபடும். புருவச்சிலை யமலை யென்றது உமாதேவியாரை.

இத்தலத்தில் அகத்தியர் பூசித்தமையை **மாயூரப்புராணம்** அகத்தியர் வழிபடுபடலத்தால் உணர்க. (40)

41. தீக்குவித் தாரநெய் பெய்த லிவட்கிதஞ் செய்தலென்று
வாக்குவித் தார முரைப்பா ரலாற்சக வண்பயிரை
யாக்குவித் தாரம் மயிலைவள் ளற்குரைத் தாகுலமார்
நீக்குவித் தாரவ ரேதாய ரென்றுகண் ணீர்பெய்யுமே.

(கு-ரை.) தீ குவித்து - தீயைமூட்டி. ஆர - நிறைய உண்ண; ''ஏதிலாரார'' (**குறள்**) என்பதுபோல. இவளுக்கு இதம் செய்தல் தீயைக்குவித்து அதன்பால் நெய் சொரிதலை ஒக்கும். வாக்கு வித்தாரம் - விரிந்த பேச்சுக்களை. சகம் - உலகம். சகவண்பயிரை ஆக்குவித்தார்: ''விச்சதின்றியே விளைவு செய்குவாய்'' (**திருவா.**) ஆகுலம் - துயரத்தை. கண்ணீர்பெய்யும் - கண்ணீருகுப்பாள். ஆர் நீக்குவித்தாரோ அவரே எனக்குத்தாயர்; யாரேனும் தூது செல்லவேண்டு மென்று குறிப்பித்தபடி.

இது பாங்கி கூற்று. (41)

42. பெய்யற் கெழுதரு கார்க்கந் தரத்தெம் பிரான்மயிலைத்
தய்யற் கெழுதரு நேரிடை யற்பந் தபோதனரு
மய்யற் கெழுதரு ணத்தன பாரம் வரைச்சிகர
மெய்யற் கெழுதரு லக்கிட்ட மாலம் பிருகண்களே.

(கு-ரை.) பெய்யற்கு - மழைபெய்வதற்கு. கந்தரம் - கழுத்து. தய்யற்கு = தையற்கு - தலைவிக்கு. எழுதஅரு நேர் இடை - எழுதுவதற்கரிய நுண்ணிய இடை. இடை அற்பம்: ''குலவு மருங்கற்ப மின்னே'' என்பர் பின்; 73. தபோதனரும்: உம்மை உயர்வுசிறப்பு. மையல் கெழு -

மயக்கம் பொருந்துவதற்குக் காரணமான. தருணம் - இளமை. ஏழு தரு - ஏழு மராமரங்களை. லக்கு - லக்ஷியம்; இஃது இலக்கெனவும் வழங்கும்; "இலக் கணக்கவியாகிய வாலியை யெய்தமால்" **பழைய தனிப்பாடல்.**

இது தலைவன் இயலிடங் கூறல். (42)

43. இருமந் தரவரைக் கொங்கைநல் லாள்குயி லின்னிசைகேட்
டுருமந் தரவயி னார்ப்பதற் கங்க மொடுங்கியுள்ளந்
தெருமந் தரவ மளைபுகுந் தாங்குத் திகைத்திடுமோ
சருமந் தரவண் மயிலையத் தாபுயத் தாரருளே.

**(கு-ரை.)** இரு மந்தர வரை இரண்டு மந்தரமலை போன்ற; மந்தரமலை இரண்டென்பது சைனர் கொள்கை. இன்னிசை - இனிய ஓசை. உரும் அந்தரவயின் ஆர்ப்பதற்கு - இடி ஆகாயத்தினிடத்தே முழக்கம் செய்வதற்கு. தெருமந்து - சுழன்று. அரவம் அளை புகுந்தாங்கு - பாம்பு புற்றிற் புகுந்ததுபோல. குயிலோசைக்கு இடியும் தலைவிக்குப் பாம்பும் உவமை. திகைத்திடுமோ; ஓ: வினா. நல்லாள் திகைத்திடுமோ. சருமம்தர - தோலை அணிந்தவரே; இம்முடிவு திரிபுபற்றி வந்தது. வண்மயிலை யத்தாவென்றதில் வண்மையென்றது கொடுக்கும் இயல்பையுடையாயென்று குறிப்பித்தபடி.

இது பாங்கி கூற்று. (43)

44. அருமருந் தாருவ திற்பல னேதென் றதனையத்தே
வருமருந் தாருன் மணிவா யமுதுணின் வள்ளல்வைகுந்
தருமருந் தாரு நிகர்கா மயிலைத் தவருமுள்ளந்
தெருமருந் தாருணி யம்பெற்ற தேமொழி சித்தமிதே.

**(கு-ரை.)** அருமருந்து ஆருவதில் - பெறுதற்கரிய அமுதத்தை உண்பதனால். பலனேது: ஏதென்னும் வினா இலதென்னும் பொருளில் வந்தது; "கற்றதனா லாய பய னென்கொல்" **(குறள்)** என்றதில் 'என்' என்றதைப்போல. அத்தேவரும் அருந்தார். தேவரும்: உம்மை சிறப்பு. உணின்- உண்டால். உண்ணின் அருந்தாரென்க. வைகும் மயிலையெனக் கூட்டுக. தரு மரும் -தருதல் மருவிய. தாரு- கற்பகம். தரு தாரு நிகரென்றுமாம். தாருணியம் - தருண பாவம்; இளமை. தேமொழி: விளி. இது சித்தம் -இது நிச்சயம்.

இது தலைவன் தலைவியைப் புகழ்தல். (44)

45. சித்தரி லேகர் தினந்தாழ் மயிலையிற் சிற்பரபொன்
கைத்தரி லேகநற் பட்டுடை நீக்குங் கணிகையர்ச்சேர்
பித்தரி லேகணிக் கப்படும் யானும் பெறுகுவனோ
பத்தரி லேக னிவனென்று நோக்குநின் பார்வையையே.

**(கு-ரை.)** *சித்தர் - ஸித்தர். இலேகர் - தேவர். பொன் கைத்தரில் - பொன்னைக் கையிலளித்தால். நற்பட்டுடையை ஏகும்படி நீக்குகின்ற. கணிக்கப்படும் - எண்ணப்படும். யானும்: உம்மை இழிவு சிறப்பு. பத்தரில் இவன் ஏகன் - அடியார்களில் இவன் ஒருவன்.*

நின்பார்வையை யானும் பெறுகுவனோ வென்க. (45)

46. பாரத்த னத்தினங் கொல்லைக் கிவர்பல கால்வரனின்
சாரத்த னத்தினன் றோவறிந் தேனின்று தண்டடத்தின்
றீரத்த னத்தினஞ் சேர்ந்துவந் தாடுந் திருமயிலை
யூரத்த னத்தினஞ் சுண்டான் வரையிலுன் னுள்ளுறையே.

**(கு-ரை.)** *பாரத்தனத்தி: விளி. நம் கொல்லைக்கு. இவரென்றது தலைவரை. நின்சாரத்தனத்தின் அன்றோ - உன்னுடைய கள்ளத்தன்மையினாலேயன்றோ; சாரத்தனம்-கரவிற்கலத்தல்; "எங்கள் சாரசோர சிகாமணியை"* **(அழகர்கலம். 93)** *இன்று அறிந்தேன். தீரத்து - கரையில். அனத்து இனம் - அன்னப்பறவையின் கூட்டங்கள். திரு மயிலை ஊர் அத்தன் அத்தி நஞ்சு உண்டான்; அத்தி - கடல்; அப்தியென்பதன் திரிபு. உள்ளுறை - உள்ளக்கிடக்கை.*

உள்ளுறையை அறிந்தேனென்க.
இது பாங்கி தலைவியைநோக்கிக் கூறியது. (46)

47. உள்ளக் கவலையி னாடுகின் றேன்மக ளூர்க்குச்சென்ற
கள்ளக் கவலை யறிகில னீவிருங் கண்டிலிரோ
வெள்ளக் கவலைய மார்த்தார் மயிலை விமலர்வெற்பில்
வள்ளக் கவலையின் மாந்தரை மாட்டு மறத்தியரே.

**(கு-ரை.)** *கவலையின் நாடுகின்றேன். கவலை அறி கிலன் - கவர்த்தவழியை அறியேன். நீவிரும்: உம்மை இறந்தது தழீஇயது. வெள் அக்க வலையம் - வெண்மையாகிய அக்குமணி மாலையை. வள் அக்கவலையில் -. கூரிய கண்களாகிய வலையினூடே. அக்கவலை: "அஞ்சனக்கண்*

வலையெறிவீர்''. (**அழகர்கலம். 86**) வலையென்றதற்கேற்ப மாட்டுமென்றார்.

இஃது எயிற்றியரைச் செவிலி வினாதல். *(47)*

48. மறந்திருப் பாரல ருன்னைநின் மேல்வைத்த வாஞ்சையினைத்
துறந்திருப் பாமனங் கொள்ளா ரிரதஞ் சுடரவன்றென்
புறந்திருப் பாமுன் வருவார் மயிலைப் புனிதன்வெற்பிற்
றிறந்திருப் பாவையொப் பாய்விடை நீகொடு செல்பவர்க்கே.

(**கு-ரை.**) உன்னைமறந்து இருப்பார் அல்லர். துறந்து இருப்பு ஆம் மனம் கொள்ளார்; இருப்பு - இரும்பு; இரும்பு இரங்காத மனத்திற்கு உவமை; ''இரும்பு தருமனத்தேனை'' (**திருவா.**) ''இரும்புபோல் வலியநெஞ்சம்'' (**திருமாலை. 17.**) சுடரவன் இரதத்தைத் தென்புறம் திருப்பாமுன்னர் - தட்சிணாயனம் வருமுன்னர்; கார்ப்பருவம் வருவதற்கு முன்னென்று குறிப்பித்தபடி. சுடரவன் - சூரியன். திறம் - கற்பு; ''தீதிலா வடமீனின் றிறமிவ டிறமென்றும்'' (**சிலப். 1:27**); இயல்பும் ஆம்.

செல்பவர்க்கு நீ விடைகொடு.
இது பாங்கி தலைவியை வேண்டல். *(48)*

49. செல்லினஞ் சாரவுயர்கா மயிலைச் சிவன்சயில
வில்லினஞ் சாரவி காரன் பொருப்பின் மெலிமருங்குல்
வல்லினஞ் சாரலஞ் சோலையிற் புள்ளொலி மல்குமுன்போ
லல்லினஞ் சாரதற் கேதுவைச் சென்றறி யத்தகுமே.

(**கு-ரை.**) செல் இனம் - மேகக்கூட்டம். சயிலவில்லி - மலைவில்லை உடையார். நஞ்சு ஆர் - விடத்தையுண்ட. அவிகாரன் - வேறுபாடுறாதவர். மருங்குல்வல்லி - இடையால் வல்லிபோல்வாய். நம் சாரல் அம் சோலையில் - நம்முடைய மலைப்பக்கத்திலுள்ள அழகிய சோலையில். புள் ஒலி மல்கும் - பறவையின் ஓசை பெருகாநிற்கும். அல்லின் அஞ்சார் - இருளினிடத்தே செல்லுதற்கு அச்சமில்லாதவர்கள். ஏது - காரணம். அறியத்தகும் - அறிய வேண்டுவது.

இஃது இரவுக்குறி; பாங்கி தலைவன் வரவை அறிவுறுத்தல். *(49)*

50. தகவிலை யம்புகுந் தாரெனி னும்பெருந் தன்மையுள்ளார்
நகவிலை யம்பு தொடவளைத் தார்கடை நாளிலிந்தச்
சகவிலை யம்புரி வார்வளை முத்தந் தடவனசத்
தகவிலை யம்பு நிகர்க்கு மயிலை யமர்பதியே.

*(கு-ரை.)* தகவு இல் ஐயம் - தகுதி இல்லாத பிச்சைக்கு. நக விலை - மலையாகியவில்லை. கடைநாள் - ஊழிக்காலம். சகம் இலையம் புரிவார்; இலையம் = லயம் - அழிவு. வளைமுத்தம் - சங்கிற்றோன்றியமுத்து. வனசத்து அகம் இலை அம்பு நிகர்க்கும் - தாமரையினது இலையின் உள்ளிடத்தே உள்ள நீர்த்துளியை ஒக்கும் -முத்தம் அம்பு நிகர்க்கும்.

*புரிவார் அமர்பதி மயிலையென்க.* *(50)*

51. பதியனந் தங்கள் பெறினு மயிலைப் பதியகலா
முதியனந் தங்கடந் தாடும் பரமன் முராரிதுணைக்
கதியனந் தங்கயன் காண்பரி யான்பொற் கழல்பணிவோர்
நிதியனந் தங்கம லம்பெற்று வாழ்வர் நிகரின்றியே.

*(கு-ரை.)* பதி அனந்தங்கள் - அநேகம் திருப்பதிகளை. முதியன் - முதுமையை உடையான்; இத்தலத்தில் வள்ள லாரைக் கிழவரென்றும் அம்பிகையைக் கிழவியென்றும் கூறுவர். அந்தம் - முடிவுகாலத்தை. முராரி -திருமாலும். துணைக்கதி அன்னம் தங்கு அயனும்; துணைக்கதி - விரைவையுடைய நடை. நிதிய நந்து - சங்கநிதியையும்; நந்து- சங்கு. அம் - அழகிய. கமலம் - பத்ம நிதியையும். *(51)*

52. நிகரதி கந்தமக் கில்லார் மயிலை நிருபர்குல
சிகரதி கந்தத் தொலிபோக்கி நீமணஞ் செய்கைநன்றாற்
புகரதி கந்தக் குழற்பேதை யோடுமிப் பூம்பொழிற்கட்
சுகரதி கந்தர்ப்ப வேள்வியைச் செய்யத் துணிகின்றதே.

*(கு-ரை.)* தமக்கு நிகர் அதிகம் இல்லார் - தமக்கு ஒப்பும் உயர்வும் இல்லாதவர். இல்லாரும் நிருபருமாகிய வள்ளலாரது. குலசிகர - குலமலையையுடையாய். திக் அந்தத்து - திசையின் முடிவில். ஒலிபோக்கி - மணமுரசொலியை அடையச்செய்து. புகர் - குற்றம். அதி கந்தம் - மிக்க நறுமணத்தை உடைய. ரதி - விருப்பம். கந்தர்ப்ப வேள்வியை - காந்தர்வ விவாகத்தை; ''காந்தர்ப்ப மென்று

முண்டாற் காதலிற் கலந்த சிந்தை, மாந்தர்க்கு மடந்தை மார்க்கு மறைகளே வகுத்த கூட்டம்" **கம்ப**. சூர்ப்பநகை. 54.

துணிகின்றது புகரென்க.
இது பாங்கி வரைந்து கொள்கென்றல். (52)

53. துணிப்பா யலையக லாசையை யாக்கையைத் தோலெலும்பின்
பிணிப்பா யலையகப் பிண்டமென் றெண்ணலை பேதமறக்
கணிப்பா யலையக மேயெங்ங னுய்வை கருதுகிலை
பணிப்பா யலையக லான்றாழ் மயிலைப் பரமனையே.

***(கு-ரை.)*** துணிப்பாய் - வெட்டுவாய். அல்லை - அஞ்ஞானமாகிய இருட்டை. அகல் ஆசையை - விரிந்த ஆசையை. அல்லை ஆசையைத் துணிப்பாய். யாக்கையை- உடம்பை. தோல் எலும்பின் பிணிப்பாக ஆராய்கின் றாயல்லை; பிணிப்பு - கட்டு. அகப்பிண்டம் - பாவத்தின் தொகுதி. யாக்கையை அகப்பிண்ட மென்றெண்ணலை யென்று பின்னுங் கூட்டுக. அகமே - மனமே. பணிப் பாயலை அகலான் - திருமால். பரமனைக்கருதுகிலையென்க. (53)

54. பரசமை யத்தர் பணிதெய்வ மாயுநிற் பாய்பிரமன்
சிரசமை யத்த மயிலையி லீச சிலம்புதவு
மிரசமை யத்தத ரத்துமை யோடும்வந் தித்தனுபங்
குரசமை யத்தப யந்தமி யேற்குக் கொடுத்தருளே.

***(கு-ரை.)*** பிரமன் சிரசு அமை அத்த - பிரமகபாலம் பொருந்திய திருக்கரத்தை உடையாய்; சிரசு: "சிரசுமாலை கனமேவுகண்ட சரமார்பிலணி" (***சிவரக. பசாசு.*** *9*) சிலம்பு- இமயமலை. இரச மயத்து அகரம்; இரசம் - தேன். தனு பங்குரசமையத்து - சரீரம் கேட்டை அடையும் சமயத்தில்; பங்குரம் - கேடு, வந்து தமியேற்கு அபயங்கொடுத்தருள். (54)

55. கொடுங்கால னுங்குன்றமோதினர்மாபயங்கொண்டுவிண்ணோர்
நடுங்கால னுங்கும் பிரானார் மயிலையி னங்கைநின்க
ணடுங்கால னுங்குமென் காதல்கண் டன்பி னணைந்ததனா
னெடுங்கால னுங்குல மும்வாழி யாயமு நீயுநன்கே.

**(கு-ரை.)** காலனும் குன்றமோதினர்; மோதினர் - உதைத் தருளினார். காலனையுதைத்த திருத்தலமாகிய திருக்கடவூர் வீரட்டம் இந்தத் தலத்தின் எல்லைக்குள் உள்ளது. நடுங்கு ஆலம் நுங்கும் பிரானார் - நடுங்குவதற்குக் காரணமாகிய

விடத்தை உண்டருளிய வள்ளல். நங்கை: விளி. நின்கண் அடுங்கால் - உனது விழி என்னைவருத்துங்காலத்தில். அனுங்கும் - கவலையுற்ற. நெடுங்காலம் நும்குலமும் ஆயமும் நீயும் நன்கு வாழி.

இது தலைவன் தலைவியை வாழ்த்தல். (55)

56. நன்கொடிச் சிக்கை யருந்தரி சேய்க்குற்ற நாகவல்லி
மென்கொடிச் சிக்கை விடுக்கு மயிலை விமலர்வெற்பி
லென்கொடிச் சிக்கை புரிந்தாய் தினையுண் டிலையுடுக்கும்
புன்கொடிச் சிக்கைய நின்போல் பவர்க்கிது பொறபலவே.

*(கு-ரை.)* இக்கை நன்கு ஒடிச்சு அருந்து அரி - கரும்பை நன்றாக ஒடித்து உண்ணும் குரங்கு. சேய்க்கு - தன் குட்டிக்கு. நாகவல்லி மென்கொடி சிக்கை - வெற்றிலைக் கொடியாலுண்டாகிய பின்னலை. என்கொடு இச்சிக்கை புரிந்தாய் - எதைக்கொண்டு இச்சித்தல் செய்தாய். கொடிச்சிக்கு - கொடிச்சியை; உருபு மயக்கம்; கொடிச்சி - குறிஞ்சி நிலமகளாகிய தலைவி. என்கொடு கொடிச்சியை இச்சிக்கை புரிந்தாய். பொற்பு - அழகு.

இது பாங்கி குலமுறை கிளத்தல். (56)

57. பொற்பங் கனைய வழல்பெயுந் திங்களற் போதெனக்கோர்
கற்பங் கனையடங் காகட லென்று கலுழுமிக்கின்
முற்பங் கனைய மொழியாண் மயலை மொழியனமே
வெற்பங் கனையமர் பங்கார் மயிலையில் வித்தகர்க்கே

*(கு-ரை.)* பொற்பு அங்கம் நையத் திங்கள் அழலைப் பெய்யும். அல் போது - இராப்பொழுதானது. அற்போதெனக்கோர் கற்பம்: "நீடலை யாறுகமென்பாள்" *(80.)* கற்பம் - பிரமன் வாழ்நாள். கனை - கனைத்தல்; முழங்குதல். கடல் கனைத்தல் அடங்காது. அடங்கா: தொகுத்தல். இக்கின் முன் பங்கு அனைய - கரும்பினுடைய அடிப்பாகத்தை ஒத்த; "கருப்புக் கான்மட்டுந்தின்றாலெனநின்ற கண்ணப்பன்" ***(தனிப்பாடல்.)*** வெற்பு அங்கனை - பார்வதி தேவியார்.

அனமே வித்தகர்க்கு இவள்மயலை மொழி.
இஃது அன்னத்தூது. (57)

58. தகர மருக்குழ லாண்மதன் போர்க்கன்றித் தாயர்வசை
பகர மருக்கு மயர்வெய்து மோபல கோபுரத்தின்
சிகர மருக்கன் பதந்தொட வோங்குந் திருமயிலை
நகர மருக்க மொசிக்குந் தனத்துமை நாயகனே.

**(கு-ரை.)** தகரம் - மயிர்ச்சாந்து. வசைபகர் தாயர் அமருக்கும். அயர்வு எய்துமோ - வருத்தம் அடைவாளோ. அருக்கன்பதம் - சூரியனுடைய பதத்தை. சிகரம் ஓங்கும். உக்கம் ஒசிக்கும் - இடையை மெலியச் செய்யும்.

நகர் அமர் நாயகனே அயர்வெய்துமோவென முடிக்க. இது பாங்கி கூற்று. *(58)*

59. நாயக மானக ரங்களுக் கம்புய நாயகிக்குத்
தாயக மானக மேமுதற் பல்லியஞ் சார்ந்ததென்றுந்
தூயக மான கனகா விரிநதி சூழ்ந்ததுமாற்
சாயக மானக வில்லார் மயிலைத் தனிநகரே.

**(கு-ரை.)** நகரங்களுக்கு நாயகமால்; ஆல்: அசை. அம்புயநாயகி - திருமகள். தாயகம் - இருப்பிடம்; தாய் அகம்-தாய்வீடுமாம். ஆனகம் - ஒருவகை முரசு. தூய கம் ஆன-புனிதத்தை உடைய தீர்த்தமான. மால் சாயகம் மாநகம் வில்லார் - திருமாலாகிய அம்பையும் பெரிய மேருமலை யாகிய வில்லையும் உடையார்.

மயிலைத் தனிநகர் நாயகம், தாயகம், சார்ந்தது, சூழ்ந்ததென்க. *(59)*

60. தனத்துக்க மைந்தகண் வெந்நீர்க் குளியுந் தலைவரெங்கை
யினத்துக்க மைந்தமை யுள்ளமு நீங்கல வெண்கணனைச்
சினத்துக்க மைந்தல செய்தார் மயிலைச் சிலம்பிடத்தென்
மனத்துக்க மைந்தநின் னோடும் பிறந்து வளர்கின்றதே.

**(கு-ரை.)** தனத்துக்கு அமைந்த - கண்வெந்நீர்க்குளி - இடைவிடாது அழுவதால் உண்டாகும் வெம்மையை யுடைய கண்ணீரால் முழுகுதல். துயரால் உண்டாகும் கண்ணீர் வெம்மையையுடையதென்பது இங்கே அறியத் தக்கது; "இமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி" **(குறுந்தொகை)**, "எனதுவிழி வேகவதி நீரை விலக்கிலார்" **(கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டுவிடுதூது, 251.)** தனத்துக் கமைந்தகண் வெந்நீர்க்குளி. "கணீரிற்கொங்கை நனையா"

(*62.*) எங்கையென்றது பரத்தையை. இனத்து - இனத்தின் திறத்தில். கமைந்து அமை உள்ளமும் - பொறுத்து அமைந் திருக்கின்ற என் உள்ளமும். குளியும் உள்ளமும் நீங்கல. எண்கணன் - பிரமன்; பிரமனை எண்கணனென்றல் மரபு; "எண்கணனைக் குட்டியகுட் டெங்கேனும் பட்டதோ" (**சிவஞான வள்ளலார்.**) சினத்து - கோபித்து; வலித்தல் விகாரம்; சினத்தினாலெனினும் பொருந்தும். கம் ஐந்து அல- தலை ஐந்து அல்லனவாக; நான்காக என்றபடி; "போதி டனஞ்ச முகந்தமி லொன்றை யீர்ந்திடுமேந்தல்" (*68.*) மனத்துக்கம் வளர்கின்றதென இயையும். மைந்த: விளி.

இது பாலனைப் பழித்தல். (*60*)

61. வளமலி னந்த வனமயி லைப்பரன் மார்க்கண்டனை
யுளமலி னந்தக னீர்ப்பவென் றோன்வெற்பி லும்பர்தந்தா
வளமலி னந்த முறினும்பொய் யாதென் வாய்மைநின்குந்
தளமலி னந்தவ ளஞ்சாரி னுந்தவி ரேனினையே.

(**கு-ரை.**) வளம் மலி நந்தவனம். உள்ள மல்லின் அந்த கன் ஈர்ப்ப - தனக்குரிய மற்போரால் யமன் இழுக்க. உம்பர் தந்தாவளம் அல்லின் அந்தம் உறினும் - தேவர்களுடைய யானையாகிய ஐராவதம் இருளின் இயல்பை அடைந்தாலும். நின்குந்தள மலினம் தவளம் சாரினும் - நின்கூந்தலின் கருமை வெண்ணிறத்தை யடைந்தாலும்; மலினம் - கருமை.

இது தலைவன் பிரியேனென்றல். (*61*)

62. நினையா வருந்துய ரெய்தியெப் போதுங்க ணீரிற்கொங்கை
நனையா வருந்துமிந் நங்கைதன் சோகமுன் னல்வரத்தாற்
றனையா வருந்துதி செய்யநின் றோன்வயந் றண்கரும்பைச்
சினையா வருந்து மயிலைவெற் பாவின்று தீர்ந்ததுவே.

(**கு-ரை.**) நினையா - நினைந்து. அரு துயர் எய்தி. நனையா - நனைத்து. உன் நல் வரத்தால் - உன்னுடைய நல்லவரவினால்; வரத்து - வரவு; "சூழ்வரத்தோவருமென்று பாடமோதி ஊர்காக்குமிளையர் ஊரைச்சூழ்வரும் வரவும் இனி ஒழியுமென் றுரைப்பாருமுளர்" (**சிற்.** 212 - பேர்.); "இவண் வரத்தை விட்டனர்" (**அழகர் கலம்.**) யாவரும் தன்னைத் துதிசெய்ய. சினை ஆ - கருப்பத்தையுடைய பசுவானது. ஆ கரும்பை அருந்தும்.

உன் நல்வரத்தால் நங்கையின் சோகம் தீர்ந்தது.
இது பாங்கி கூற்று. (62)

63. தீர்த்தன மாதங்க மாய்த்தோன் மயிலைச் சிலம்பிற்பொன்னை
வார்த்தன மாதங்க நந்தமங் கத்துற மார்பிலவ
ரேர்த்தன மாதங்க வெற்பூ டுருவ விருகையினன்
கார்த்தன மாதங்க மேதரு மாலின் றகற்றினமே.

(கு-ரை.) தீர்த்தன் - பரிசுத்தர். அ மாதங்கம் மாய்த்தோன்; அ: நெஞ்சறிசுட்டு; மாதங்கம் - யானை. பொன்னைவார்த்து அன்ன மாது அங்கம் நந்தம் அங்கத்து உற. ஏர் தனம் மா தங்க வெற்பு - அழகிய நகில்களாகிய பெரிய மேருமலைகள். இருகையின் நன்கு ஆர்த்தனம்; ஆர்த்தல் - கட்டுதல். ஆதங்கமே தரும் மால் - துன்பத்தையே தரும் மயக்கத்தை.

இது தலைவன் தன்னுள் மகிழ்தல். (63)

64. அகலாக வம்புரி முப்புரத் தோரை யடுவதுதந்
நகலாக வம்புவித் தேராதி யுத்தசன் னாகமெலா
மிகலாக லம்புனைந் துட்கும் படிவென்ற வீரருக்குப்
புகலாக வம்புயச் செய்சூழ் மயிலைப் புரமென்பரே.

(கு-ரை.) அகல் ஆகவம் புரி; ஆகவம் - யுத்தம். அடுவது தம் நகல் ஆக - கொல்லும் கருவி தம்முடைய புன்னகையேயாக. யுத்த சன்னாகம் -போருக்குரிய கவசம்; இங்கே போருக்குரிய கருவிகள். மிக - பயனற்றுத் தோன்ற. லாகவம் புனைந்து - லகுத்தன்மையை மேற்கொண்டு. புகல்- எழுந்தருளியிருக்கும் இடம். ஆக: இடைச்சொல்.

வீரருக்கு மயிலைப்புரம் புகல் என்பர். (64)

65. என்பர வத்தணி பூண்டார் கவுரி யெழின்மயிலாய்
முன்பர வத்தர் மயிலைக்கு நான்செலு முன்வலவா
வன்பர வத்தண் முகிலேகு மேலந்த வஞ்சியுந
மன்பர வத்தர்கொ லென்றெண்ணி நெஞ்சுநொந் தஞ்சுறுமே.

(கு-ரை.) என்பு அரவத்து அணி - எலும்பையும் பாம் பாகிய ஆபரணத்தையும். கவுரி எழில் மயிலாய் முன் பரவு அத்தர்; பரவுதல் - துதித்தல். வலவா - தேர்ப்பாகனே. வன்பு அரவம் - வலிய இடியோசையையுடைய. வஞ்சி - வஞ்சிக்கொடிபோன்ற தலைவி. நம் அன்பர் அவத்தர்கொல்; அவத்தர் - பொய்யர்; அவத்தம் = அபத்தம்.

தேரை விரைவிற் செலுத்துகவென்று குறிப்பித்தபடி.
இது தலைவன் பாகனொடு கூறல். (65)

66. அஞ்சுகந் தங்குல மென்றெய்து நீவிரிங் காயலென்றா
னஞ்சுகந் தங்குழை தோய்விழி கண்டுழை நண்ணுறுமால்
விஞ்சுகந் தங்குல வுங்கா மயிலை விமலர் வெற்பி
னெஞ்சுகந் தங்குறை நீர்புனங் காக்கின்ற நீதிநன்றே.

**(கு-ரை.)** அம் சுகம் - அழகிய கிளிகள். இங்கு ஆயல் என்றால் சுகம் தம் குலம் என்று எய்தும்; ஆயல் - தினைப்புனத்தில் கிளிகளை ஓட்டுவதோர் ஓசை; இஃது ஆயோவெனவும் வழங்கும். நஞ்சு உகந்து - விஷத்தின் தன்மையை மேற்கொண்டு. அம் குழைதோய் விழியைக் கண்டு. உழை - மான். விஞ்சு கந்தம் - மிக்க நறுமணம். நெஞ்சு உகந்து அங்கு உறை; அங்கு - பரணில்; உகந்து - விரும்பி; "அஞ்சமுகந்த" (68.) நீதி - முறை.

இது தலைவன் கூற்று. (66)

67. நீதி னடந்தமை வுற்றநற் றாபதர் நெஞ்சுறைவோ
னாதி னடந்தமி லான்மயி லைப்பர னன்றுமன்றுட்
கோதி னடந்தக வாடினன் வெற்பினிற் கூர்விழிதோய்
காதி னடந்த கடுங்காம வெள்ளங் கடக்கரிதே.

**(கு-ரை.)** நீதி நடந்து-நன்னெறியில் நடந்து. அமை வுற்ற-அடங்கிய. தாபதர்-தவத்தையுடையோர். தாபதர் நெஞ்சுறைவோன்: "நித்த ரகங்கை தவமறு பத்தி நிறைந் திடுசை வத்தரகம்" (7.) ஆதி நடு அந்தம் இல்லான். அன்று-அம்பிகை மயில் வடிவம் நீங்கப் பெற்ற அக்காலத் தில். மன்றுள்-சபையில். கோது இல் நடம்-குற்றமற்ற தாண்டவத்தை. காதினள் தந்த.

இது தலைவன் பாங்கனைநோக்கிக் கூறல். (67)

68. கடனஞ் சமுகந்த கண்டனுங் காமனைக் காய்ந்தவனு
நடனஞ் சமுகந் தருக்குறச் செய்திடு நாதனும்போ
திடனஞ் சமுகந் தமிலொன்றை யீர்ந்திடு மேந்தலும்பார்ப்
புடனஞ் சமுகந்த செய்சூழ் மயிலை யுறையரனே.

**(கு-ரை.)** கடல் நஞ்சம்-கடலிற்றோன்றிய நஞ்சத்தை. முகந்த-ஏற்றுக்கொண்ட. நடனம்-தாண்டவத்தை. சமுகம்-தேவர்கள் முனிவர்களுடைய கூட்டங்கள். போது இடன்:

அஞ்ச-தாமரை மலரை இடமாகப் பெற்ற பிரமதேவர் அஞ்சும்படி. பார்ப்புடன் அஞ்சம் உகந்த-குஞ்சுகளோடும் அன்னப் பறவை விரும்பித் தங்கிய. (68)

69. அரவா ரலங்க லணிந்தோன் மயிலை யமலனுதற்
பரவா ரலங்க ணுடையோன் வரையிலுன் பக்கலினி
விரவா ரலங்கவர் செல்கவெற் பாபகல் வெம்பலராற்
குரவா ரலங்கரித் துக்கொள்வர் நீயக் குறியறிந்தே.

**(கு-ரை.)** அரவு ஆர் அலங்கல் அணிந்தோன்; ஆர்-ஆத்தி. நுதல் பரவு ஆரல் அம் கண் உடையான்; ஆரல்-நெருப்பு. உன்பக்கல்-உன்னிடத்தே. அலங்கு அவர் விரவார்; அவர் என்றது தாய் முதலியோரை. வெம்பு அலரால்-விரும்பப்படுகின்ற பூக்களாலே; "வெம்புங் கதிரிற் சுடருந் திருமூர்த்தி" (**சீவக.** 2, ந.) குரவார்-குரவமரம். அக்குறியறிந்து செல்க. பூத்த குராவையுடைய விடத்திற் செல்கவென்றபடி.

இது பகற்குறி; பாங்கி தலைவனுக்குக் குறியிடங் கூறல். (69)

70. குறியம ருங்கர வல்குற் கருங்குழற் கொவ்வைச் செவ்வாய்ச்
செறியம ருங்கர வுங்கவர் கண்ணியைத் தென்மயிலை
மறியம ருங்கர வள்ளல்வெற் பாவரை வாயெமதூ
ரறியம ருங்கர வம்பல வார்ப்ப வறுகணிந்தே.

**(கு-ரை.)** குறிய மருங்கு-சிறிய இடையையும். அமரும் கரவும் கவர்கண்-சண்டையையும் கள்ளத்தையும் கவருகின்ற விழிகள்; அமரும்... கவர்கண்: "பேரம ருந்துங்கண்" (39.) மறி-மான். எமது ஊர் அறியக் கண்ணியை வரைவாய். மருங்கு-பக்கத்தே. அரவம் பல ஆர்ப்ப-பலவகையான முழக்கத்தை உடைய வாத்தியங்கள் முழங்க. அறுகு- மங்கலத் திரவியங்களுள் ஒன்று. அணிந்து வரைவாய். அறுகணிந்து வரைதல்: "உரிமையிற் பாடித் திருமணப் பந்தருள், அமரர் முன்புகுந் தறுகு சாத்தி" (**கோயில்நான்மணி.** 4:20-21); "ஆவிரை யலரு மறுகையுஞ் செரீஇ" **பெருங்கதை.**

இது பாங்கி தலைவனை விரைந்து வரைந்து கொள்கென்றல். (70)

71. அறுவத னந்தடங் கையா றிரண்டுடை யையறகையன்
பறுவத னந்தனை பாகன் மயிலைப் பரமன்வெற்பிற்

சிறுவத னந்தரு வேன்சொல்க யானிந்தச் சென்மத்திலோ
வுறுவத னந்தர சன்மத்தி லோவன்ப ரோடினியே.

(கு-ரை.) அறுவதனம்-ஆறுமுகம். ஆறிரண்டு தடம் கை உடைய ஐயற்கு-முருகக் கடவுளுக்கு. பறுவத நந்தனை-மலையின் மகளாகிய உமாதேவியார். சிறுவ-குழந்தாய். தனம் தருவேன்-பால் கொடுப்பேன்; தனம்: ஆகு பெயர். அனந்தர சன்மம்-பின்வரும் பிறவி.

அன்பரோடு உறுவது இந்தச் சன்மத்திலோ அனந்தர சன்மத்திலோ சொல்க.

இது பாலனை நோக்கிப் பகருதல். (71)

72. ஓடம் படவட ருங்கட லேவடி வுற்றுரவாற்
றோடம் படவட நேர்வரி கூர்தடத் தூர்வளையே
நீடம் படவடம் பேமயி லைப்பர னெய்தலில்வே
ணீடம் படவட கால்வந்து மன்பர் நினைந்திலரே.

(கு-ரை.) ஓடம்-ஓடமும். படவு-படகும்; "சரக்கோடங்கங் குலைபடவே தகுமோ வங்கங் குலைபடவே" (**அழகர் கலம்பகம்.**) ஆற்று ஓடு அம்பட; அம் பட-நீர் படுதலினால். வடம் நேர் வரி கூர் தடத்து ஊர்-தேர் வடத்தை ஒத்தவரிகள் மிக்க கரைகளில் ஊர்ந்து செல்கின்ற. வளையே-சங்கமே. நீடம் படு அ அடம்பே-பறவைக் கூடுகள் பொருந்திய அழகிய அடம்புகளே. வேள் நீடு அம்பு அட-மன்மதனுடைய நீடிய பாணங்கள் வருத்தும்படி. வடகால்-வடகாற்று.

இது காமமிக்க கழிபடர்கிளவி. (72)

73. இலவும ருங்கற் பகற்காத்த கிள்ளையொத் தேன்கமுகும்
பலவும ருங்கற் பகநேர் மயிலைப் பரமன்வெற்பிற்
குலவும ருங்கற்ப மின்னேநின் போலென் குறைமறுத்துச்
சொலவும ருங்கற்ப ரேன்மட லூரத் துணிவனின்றே.

(கு-ரை.) இலவு மருங்கு-இலவமரத்தினிடத்தே. அல் பகல் காத்த கிள்ளை-இரவும் பகலும் காத்த கிளியை; இலவுகாத்த கிளியானேனென்பதொரு **பழமொழி.** அரிய கற்பகமரத்தைக் கமுகும் பலவும் ஒக்கும் மயிலை. அற்பம் மருங்கு-சிறிய இடையை உடைய. என் குறையை. உமரும்-உன்னைச் சார்ந்தவர்களும், மறுத்துச் சொல்ல உமருங் கற்பரேல் என இயைக்க.

இது தலைவன் மடலேறுவேனென்றல். (73)

74. இன்றே னலம்புனத் தேந்திழை யைக்கண் டிடாமலயர்
கின்றே னலம்புரை கேட்டிலிர் போலுங் கிளத்துதிர்கா
மென்றே னலம்புகுஞ் சால்பாய் மயிலைமெய் யன்வரைமான்
கன்றே னலம்புகு குன்றே யவர்சென்ற கானெறியே.

**(கு-ரை.)** இன்று ஏனல் அம் புனத்து; ஏனலம்புனம்-தினைக்கொல்லை. அயர்கின்றேன்-வருந்துகின்றேனுடைய. அலம்பு உரை-கூறுகின்ற சொற்களை. கிளத்துதிர்-சொல் வீராக. கா மெல் தேன்-சோலையிலிருந்து ஒழுகுகின்ற மெல்லிய தேனானது. அலம் புகு சால் பாய்-கலப்பை புகும் சால்வழியே பாய்கின்ற. மான் கன்றே. நல் அம்பு உகு குன்றே-நல்ல அருவிநீர் விழுகின்ற குன்றுகளே; "இலங்கு மருவித்து.... மலை" (**கலி.**); அம்பு-நீர். அவர் என்றது தலைவியை. கான்நெறியைக் கிளத்துதிர்.

இது தலைவன் தலைவிபயிலிடம் நோக்கி அழுங்கல். (74)

75. கான்கண் டகமயிர் கோத்தீர்ப்ப வெம்பரல் கால்பொதுப்ப
வான்கண்டகனனெனத்தோன்றருக்கன்மெய்வாட்டவெங்கண்
மான்கண் டகனொரு வன்பின் சுரஞ்சென்ற வாதையெவர்
தான்கண் டகநலி யார்மயி லைப்புனி தன்வரைக்கே.

**(கு-ரை.)** கண்டகம்-முட்கள். மயிரை ஈர்ப்ப; ஈர்ப்ப-இழுக்க. பரல்-பருக்கைக்கல். பொதுப்ப-துளைக்க. வான்கண் தகனனென-ஆகாயத்தில் அக்கினியைப் போல. அருக்கன்-சூரியன். எங்கள்மான்-எங்களுடைய மான் போன்ற விழியையுடைய மகளானவள். கண்டகன் ஒருவன் பின்-கொடியவன் ஒருவன் பின்னே. வாதை=பாதை-வருத்தம். எவர்கண்டு அகம் நலியார். தான்: அசைநிலை.

இது சுரத்திடைச் செவிலித்தாய் இரங்கல். (75)

76. கேதப் படுகை மதியழற் கன்றிக் கெடுமதனன்
போதப் படுகை பொறுத்துய்யு மோகொன்றைப் போதருள்வாய்
சீதப் படுகையிக் கோங்கு மயிலைநந் தேவமிக்கென்
றோதப் படுகை வலியமன் பர்க்கரு ளுத்தமனே.

**(கு-ரை.)** கேதப் படுகை-துன்பப்படுதல். மதி அழற்கு-நிலாவாகிய நெருப்பினால்; அழற்கு: உருபுமயக்கம். மதி அழற்குக் கேதப்படுகை அன்றி. போத அப்பு அடுகை- மலரா

கிய பாணம் வருத்துதலை; போது-மலரும் பருவமுள்ள அரும்பு; ''சுருப்புநாண் கருப்புவி லருப்புக்கணை தூவ'' (**மணி மேகலை.**) படுகையில் இக்கு ஓங்கும்; இக்கு-கரும்பு. மிக்கு என்று ஓதப்படு கைவலியம்-மிக்கதென்று நூல்களாற் சொல்லப் படும் முத்தியை; *மிக்கு: மிக்கதென்பதன் விகாரம்.* *(76)*

77. உத்த மனத்தி னணிதிகழ் தாமரை யோடைகளி
னித்த மனத்தின நீங்கா மயிலை நிமலன்றன்பால்
வைத்த மனத்தினன் மாதவ ருற்பவ மாற்றிவிதி
யத்த மனத்தி னழியாப் பதம்பெற் றமர்வரன்றே.

**(கு-ரை.)** உத்தமன். நத்தின் அணி-சங்கத்தின் வரிசைகள். நித்தம் அனத்து இனம் நீங்கா-தினமும் அன்னப் பறவையின் கூட்டம் விலகாத. நல் மனத்தின் மாதவர்; எழவாய். உற்பவம்-பிறவி. விதி அத்தமனத்தின்-பிரம தேவருடைய அழிவு காலத்திலும். அழியாப் பதம்-சிவபதம். மாதவர் அமர்வர். அன்று, ஏ: அசை. *(77)*

78. அமரா வதியபி ராமமு நேரி லணிமயிலை
யமரா வதியரன் வெற்பிலிங் காறலைப் போருமரே
லமரா வதியல் பலவேயன் றேன்மண் ணவர்முதலா
வமரா வதியரி லென்னோ டெதிர்ப்பவ ராருளரே.

**(கு-ரை.)** *அமராவதி அபிராமமும்-சுவர்க்க நகரத்தின் அழகும். மயிலை அமரா வதி-மாயூரத்தில் விரும்பி எழுந்தருளியிருக்கின்ற. இங்கு ஆறு அலைப்போர்-இவ்வழியில் அலைத்தற்கு வந்தோர். உமரேல்-உன்னைச் சார்ந்தவராயின். அமராவது இயல்பு அலவே-சண்டை செய்தற்குரியதன்று. அமர அவதியரில்-மேல் எல்லையாக உள்ளவர்கள் யாவரிலும்; அமர-முற்றும்; ''அமர வரம்பயில் கான்போ யிறந்தனர்'' (திருவரங்கத் தந்தாதி) அவதி-எல்லை.*

இது தலைவன் தலைவியை விடுத்தல். *(78)*

79. ஆர்க்கணி தானம் புலியோ டணியு மரன்மயிலை
யூர்க்கணி தானந் தனத்திடை நைத லொழிமனனே
பார்க்கணி தானம் பதியென் றடியும் படியுமிவர்
கூர்க்கணி தான முரைப்பது போலிமை கூடுமன்றே.

**(கு-ரை.)** *ஆர் கண்ணி-ஆத்திமாலையை. தான்: அசை. மயிலை ஊர்க்கு அண்ணிது ஆம் நந்தனத்திடை; அண்ணிது-*

அருகில் உள்ளது; நந்தனம்-சோலை. பார்க்கண் இதால் நம் பதி என்று அடியும் படியும்-பூமியின் கண் இதுதான் நம்முடைய இடம் என்று தாள்கள் படிந்திரா நின்றன; இதால்; ஆல்: அசை. இவர் கூர்க்கண்-இம்மங்கையருடைய கூர்மையாகிய கண்கள். நிதானம்-நிச்சயம்.

இது துணிவு. *(79)*

80. கூடலை யாறு முடையாய் மயிலையிற் கோயில்கொண்டோய்
பீடலை யாறு படருஞ் சடில பெருமயலா
ணீடலை யாறுக மென்பா ளுணவையு நீத்தனளுன்
னூடலை யாறுக வொண்டொடி யோடும்வந் தொன்றுகவே.

**(கு-ரை.)** கூடல் ஐயாறும் உடையாய்; கூடல்-மதுரை. பீடு-பெருமை. அலை ஆறு படரும். சடில-சடையை யுடையாய். மயலாள்-மயக்கத்தை உடைய தலைவி; நீடு அல்லை-நீடிய இராப்பொழுதை. ஆறு உகம் என்பாள்; உகம்-யுகம்; "இற்றை நீடிரவொன் றஞ்சுகம்" **(திருவேங்கடத்தந்தாதி)**; "கங்குற் போது குவாலுகமே" **(திருவரங்கக் கலம்பகம்.)** உணவையும் நீத்தனள்: இது பசியட நிற்றலென்னும் மெய்ப்பாடு. உன் ஊடலை-உனது பிணக்கை.

இது பாங்கி தலைவனுக்குத் தலைவியின் காமமிகுதியை உரைத்தல். *(80)*

81. ஒன்றா திருக்கு மனத்தா ரிடைகடை யூழியினும்
பொன்றா திருக்கும ரன்றனைக் காயுமெப் போதுமியல்
குன்றா திருக்கு முடிமீ திருக்குங் கொழுந்தளிர்சூழ்
மென்றா திருக்கு மலர்க்கா மயிலையின் மெய்ப்பொருளே.

**(கு-ரை.)** திருக்கு மனத்தாரிடை ஒன்றா; ஒன்றா- பொருந் தாது; ஒன்றாதென்பதன் விகாரம். பொன்றா- அழியாது; பொன்றாதென்பதன் விகாரம். திரு குமரன் தனை-திருமகளின் புதல்வனாகிய மன்மதனை. இயல்குன்றாது-தன்மை குறை யாது. இருக்கு முடி-வேதத்தின் முடி; உபநிடதம். இருக்கு முடிமீதிருக்கும்: "நித்த ரகம்... நான்மறை மத்தகமே", "வேதாக மத்தந்த மேவுமத்தா" என்றார் முன்னும்; 7, 12. மென் தாது இருக்கும்; தாது-மகரந்தம். கா-சோலை.

மயிலையின் மெய்ப்பொருள் ஒன்றாது, பொன்றாது, காயும், குன்றாது, இருக்குமென முடிக்க. (81)

82. மெய்வாம னற்குன் றரிவைக்கு மாழி மிகவுமன்பு
செய்வாம னற்குங் கொடுத்தோன் மயிலையிற் றேமொழிநெய்
பெய்வாம னற்குன்ற வென்னுதல்போலும் பெருமயலால்
நய்வாம னற்குன் புணர்ச்சியெய் தாதென்று நான்சொல்வதே.

**(கு-ரை.)** மெய் வாமம் நல் குன்று அரிவைக்கும்-திருமேனியின் இடப்பாகத்தை உமாதேவியாருக்கும். ஆழி-சக்கரத்தை. வாமனற்கும்-திருமாலுக்கும். தேமொழி: விளி. அனல் குன்ற நெய் பெய்வாம் என்னுதல் போலும்: ''நெய்யா லெரிநுதுப்பே மென்றற்றால்'' (**குறள். 1148.**) நைவாமென்றது எதுகைநோக்கி நய்வாமெனப் போலியாயிற்று. நைவாம் மனற்கு-நைதலையுடைய மன்னனுக்கு. நான் சொல்வது பெய்வாமென்னுதல் போலும்.

இது பாங்கி கூற்று. (82)

83. நானத் திலகத்தி நங்குடிப் பேதையொர் நாயகன்பின்
கானத் திலகத்தி னீங்கிவந் தாள்செலக் கண்டதுண்டோ
தானத் திலகத்தி வென்றார் மயிலைத் தடஞ்சிலம்பின்
மானத் திலகத்தி யன்போன்முக் கோல்கொண்ட மாதவரே.

**(கு-ரை.)** நானத் திலகத்தி-கத்தூரிப் பொட்டையணிந்தவள். அகத்தின் நீங்கிக் கானத்தில் வந்தாள்; அகம்-வீடு. தானத்து இலகு அத்தி-மதத்தால் விளங்குகின்ற யானையை. மானத்தில்-பெருமையில். முக்கோல் கொண்ட மாதவர்-திரிதண்ட சந்நியாசிகள்.

இது செவிலி முக்கோற்பகவரை வினாதல். (83)

84. மாதிடத் தானந் தகன்வீழ மோதினன் மாமயிலை
மூதிடத் தானந்த நாதன் பொருப்பின் முதுமறையோய்
சோதிடத் தானந் தவிப்பாறச் சொல்லுக சுற்றமல
ரோதிடத் தானந்த மீளிபின் போயின ளொன்றிடவே.

**(கு-ரை.)** மாது இடத்தான். அந்தகன்-யமன். மூதிடம்-பழமையான இடம். மூதிடத்து ஆனந்த நாதன். நம் தவிப்பு ஆறச் சோதிடத்தாற் சொல்லுக. அலர்-பழிமொழியை. தானென்றது தலைவியை. மீளி-பாலை நிலத் தலைவன்.

மறையோய் ஒன்றிட ஓதுக. (84)
இது சோதிடங் கேட்டல்.

85. இடங்கிடை யாகுயந் தீட்டக் கிழிதனி லேந்திழையி
னுடங்கிடை யாகுவ தில்லைநின் றூரி நுதிபெரிதால்
விடங்கிடை யாகு மிடற்றார்க் கிதுவென மெய்யர்மகச்
சடங்கிடை யாகுதி பெய்யு மயிலைத் தலத்தன்பனே.

**(கு-ரை.)** குயம் தீட்ட கிழிதனில் இடம் கிடையா; குயம்-தனம்; கிழி-துணி, படம். தூரி-எழுதுகோல்; தூரிகை யென்பதன் கடைக்குறை. விடம்-விஷம். கிடை-கிடத்தல். சடங்கு-வைதிகக்கிரியை; கரணமென்பர்.

இது பாங்கி எழுதரிதென்றல். (85)

86. அன்புடைக் கும்ப முனிபூசை கொண்டவ ரன்பருற்ற
துன்புடைக் கும்பர னார்தென் மயிலைநந் தோகையினைத்
தன்புடைக் கும்ப முலைபொரச் சேர்த்துத் தனதுகைவேல்
வன்புடைக் கும்பலை மாய்வித்த வேந்தை மறுப்பதன்றே.

**(கு-ரை.)** கும்பமுனி-அகத்திய முனிவர். துன்பு உடைக் கும் பரனார். தன் புடை-தன்னிடத்தே. கும்பம்-யானை மத்தகம். கும்ப முலை: "கரிக்கும்ப மென்னுந் தனக்கங்கை' (22.) தோகையினைத் தன்புடைச்சேர்த்து. வன் புடைக்கு-வலியகுத்திற்கு. உம்பலை-யானையை. வேல் வன்புடைக் கும்பலை மாய்வித்த: யானையைக் குத்துதற்கு வேல் உரியது; "கைவேல் களிற்றொடு போக்கி வருபவன், மெய்வேல் பறியா நகும்" **(குறள். 774)** மறுப்பது அன்று-மறுத்தல் தகுதி அன்று.

இது பாங்கி களிறுதருபுணர்ச்சியால் அறத்தொடு நிற்றல். (86)

87. மறுகுத லைக்கணி கம்பிரி யாது மனங்கிள்ளைதான்
பெறுகுத லைக்கணி தம்பிற வாது பிறைமதியோ
தெறுகுத லைக்கணி வாய்க்கால் பெருகுந் திருமயிலை
யறுகுத லைக்கணி வார்க்கெளி யேன்குறை யார்சொல்வரே.

**(கு-ரை.)** கணிகம்-க்ஷணிகப்பொழுது. மனம் மறுகு தலைப் பிரியாது. குதலைக்கண் இதம் பிறவாது; இதம்-இன்பம். தெறுகுது-வருத்துகின்றது; இது தெறுகின்ற தென்பதன் மரூஉ; "ஏங்குதே நெஞ்சமையோ" **(தாயு**

**மானவர் பாடல்)** என்பதுபோல. கணி வாய்க்கால்-கண்ணிவாய்க்கால்-சிறிய வாய்க்கால். தலைக்கு அறுகு அணிவார்க்கு.

இது தலைவி இரங்கல். *(87)*

88. ஆரம் பரவும் புனைதென் மயிலையி லத்தரையெந்
நேரம் பரவு மனமே நெறிநட நித்திலங்க
டீரம் பரவுந் திருக்கா விரிபடி தீருதியாங்
காரம் பரவுப காரஞ்செ யென்பயங் காலனுக்கே.

**(கு-ரை.)** ஆர் அம்பு அரவும்-ஆத்திப்பூவையும் கங்கையையும் பாம்பினையும். எந்நேரமும் பரவு; பரவுதல்-துதித்தல். நெறிநட-நல்லவழியிலே நடப்பாய். தீரம்-கரை. ஆங்காரம் தீருதி. பர உபகாரம் செய்; பரவுபகாரம்: தமிழ் முடிபு. *(88)*

89. காலா னலங்கலை மாமதி பெய்யமெய் கன்றிமதன்
கோலா னலங்கலை யுந்தமி யேற்கணை கூற்றுவன்காண்
சூலா னலங்கலை நீர்மலர் மேய்வயல் சூழ்மயிலை
மேலா னலங்கலை மின்னே கொணர்தி விரைந்தெழுந்தே.

**(கு-ரை.)** காலானலம்=கால அனலம்-ஊழித்தீயை; காலம்-முடிவு. மதன் கோலால் நலம் கலையும் தமியேற்கு; கோல்-அம்பு; அணை-படுக்கை. சூல் ஆன்-கர்ப்பத்தை உடைய பசு. அலங்கு அலை-அசைகின்ற அலையையுடைய. மயிலை மேலான்-மயிலையில் எழுந்தருளிய சிவபெருமானது. மின்னே யென்றது பாங்கியை.

இது தலைவி பாங்கியைத் தூது விடல். *(89)*

90. எழுமா தவனிக ராழியை நாளு மிரந்துபதந்
தொழுமா தவனிடை வைத்தோன் மயிலையிற் றுன்னிநெறி
கெழுமா தவனிலை நின்றாற்கு மன்றல் கிளர்கமலச்
செழுமா தவனி கலைமாது மூவருந் தேவியரே.

**(கு-ரை.)** எழும் ஆதவன் நிகர்-உதிக்கும் சூரியனை ஒத்த. மாதவனிடை-திருமாலிடத்தே. ஆழியை வைத்தோன். நெறிகெழும்-நன்னெறிகள் பொருந்திய. மாதவம்-பெரிய தவத்தின்கண். கமலச்செழுமாது-திருமகள். அவனி-பூமிதேவி.

மயிலையில் மாதவம் நிலை நின்றார் திருமால்பதத்தை யும் பிரமபதத்தையும் அடைவாரென்பது கருத்து. *(90)*

91.. தேவருந் தானவ ரும்பணி தெய்வஞ் சிறையளிமென்
பூவருந் தானவ நாதம் பயில்பொழில் புக்குவெயிற்
கேவருந் தானவ சங்கொண் டுறங்கு மெழின்மயிலைக்
கோவருந் தானவ னாநினைப் போர்மனக் கோயிலிலே.

*(கு-ரை.)* பூ அருந்தா-பூவினில் உள்ளதேனை அருந்தி; பூ: ஆகுபெயர். நவ நாதம்-புதிய இசை. வெயிற்கே வருந்து ஆன். அவசம் கொண்டு-பரவசமுற்று. பொழில் புக்கு ஆன்... உறங்கு மெழின் மயிலை: "காவினிலாவந் தியங்கி யுறங்குங் கவின்மயிலை" *(17)*; வெயிற்கு ஏவரும்தான் அவசம் கொண்டு உறங்கும்-வெயிலில் யாவரும் பரவசமுற்றுத் தூங்குமென்றுமாம்; தான்: அசைநிலை. வரும்-வருவார். தான் அவன் ஆ நினைப்போருடைய மனக்கோயிலில் மயிலைக்கோ வருமென இயைக்க; "தானவ னாகிய தன்மை பெற்றானடிதாழப் பெற்றாற், றானவ னாகியதன்மைபெற் றுய்வன்" பண்டாரமும்மணிக்கோவை. *12.* *(91)*

92. கோலத் துருவங் கொடுமா லகழ்ந்துங் குறிப்பரிதாய்
ஞாலத் துருவங் கிரியார் மயிலை நகரணங்கே
சீலத் துருவன் றிசைத்தூமங் காரெனத் தேர்ந்துவிண்மின்
போலத் துருவம் பிரிந்தார்கொ லென்று புலம்பலென்னே.

*(கு-ரை.)* கோலத்து உருவம் கொடு-பன்றியின் உருவத் தைக் கொண்டு. ஞாலத்து உருவு அங்கிரியார்-பூமியை ஊடுருவிக்கொண்டு சென்ற திருவடியையுடையவர்; அம் கிரியார்-அழகிய மலையானவரெனினும் ஆம். சீலம் துருவன் திசை தூமம்-சீலத்தையுடைய துருவனது திசையாகிய வடக்கில் தோன்றிய புகை. மின்-மின்னல். சொல் துருவம் பிரிந்தார் என்று; துருவம்-நிச்சயம்.

*இது பாங்கி வம்பென்றல்.* *(92)*

93. என்னாக மாலை யெழுப்பத் தழற்கிடு மிந்தனம்போன்
முன்னாக மாலை வருங்காண்பின் னாகு முளைமதிக்கென்
பொன்னாக மாலைக் கிடுகரும் பாமிதைப் போய்வண்டுகாள்
பன்னாக மாலை யணிமயி லைப்பரன் பாற்சொல்லுமே.

*(கு-ரை.)* என் ஆகம் மாலை எழுப்ப-என்னுடைய நெஞ்சத்தில் மயக்கத்தை உண்டாக்குவதற்கு. இந்தனம்-

விறகு. மாலை வரும்-மாலைக்காலம் வாரா நிற்கும். காண்:அசை. பின் ஆகும் முளை மதிக்கு-பின்னே தோன்றும் பிறைக்கு. என் பொன் ஆகம் ஆலைக்கு இடு கரும்பு ஆம்: பொன் ஆகம்-பசலை பரந்த உடம்பு; ஆலைக்கிடுகரும்பாம்: ''ஆலைக் கரும்புபடு முன்னே'' (**அழகர் கலம்பகம், 5.**) பல் நாகமாலை-பல நாகங்களாகிய மாலைகளை. வண்டுகாள், போய் இதைச் சொல்லும்.

இது வண்டுவிடு தூது. *(93)*

94. **சொல்லவமானணண்பர் சொன்னாரெனவங்குத்தோன்றுமஞ்சைப்**
**பல்லவ மானகை வஞ்சிகண் டஞ்சிப் பகரிலெனக்**
**கொல்லவ மான மிதன்மேலு முண்டுகொ லோட்டுகதேர்**
**வல்லவ மானமர் கையா ருறையு மயிலையிலே.**

(**கு-ரை.**) சொல் அவம் மா நண்பர் சொன்னார்-மா நண்பர் பொய்ம்மொழி கூறினர். பல்லவம் ஆன கை வஞ்சி-தளிரை ஒத்த கையையுடைய தலைவி. வஞ்சி மஞ்சைக் கண்டு அஞ்சி. ஒல் அவமானம். தேரை ஓட்டுக. வல்லவ-பாகனே; வலவ என்பதன் விரி. மயிலையில் தேரை ஓட்டுக.

இது தலைவன் பாகனொடு கூறல். *(94)*

95. மயிற்காய மாய வுருத்தீர்த் துமைக்கு வடிவளித்தோ
னெயிற்காய மாயனம் பேந்து மயிலையெம் மான்முன்வண்டே
யொயிற்காய மாய வுறுப்பெங்கும் வேளம் புருவிச்சென்ற
மெயிற்காய மாயவும் போதுமென் றோதென் விதனத்தையே.

(**கு-ரை.**) மயில் காயம் மாயம் உரு தீர்த்து-மயில் வடிவாகிய மாய உருவத்தைத் தீர்த்து. எயில் காய-மும்மதிலையும் சுடுதற்கு. மாயன் அம்பு-திருமாலாகிய அம்பினை. ஒயிற்கு ஆயம் ஆய-அலங்காரத்திற்கு ஆதாயமாகிய; ஒயில்: ''நடந்தாளொருபெண்... ஒயிலாய்'' (**தனிப்பாடல்.**) காயம் ஆயவும் போதும்-காயத்தை ஆராய்ச்சி பண்ணவும் போதும்.

விதனத்தை வண்டே ஓதுக. *(95)*
இது வண்டுவிடு தூது.

96. **தனதடங் காட்டி யெனக்கடங் காமய றந்தென்முன்னே**
**மனதடங் காட்டியைப் போனின்ற வாறு மருங்கினிபத்**

தினதடங் காட்டிசை தாளார் மயிலை யெழில்வரைமே
வினதடங் காட்டில் விழிபுதைத் தோசொலு மென்கைகொண்டே.

**(கு-ரை.)** மனது அடங்கு ஆட்டியைப் போல்-மனம் அடங்கிய பெண்ணைப்போல; மனது: உலகவழக்கு; ஆட்டியென்பது பெண்ணென்னுந் துணையாய் நின்றது. ஆட்டியைப்போல் விழிபுதைத்து நின்றவாறு என்ன வியப்பு. மருங்கின் இபத்தின் அதள் தங்கு-இடையில் யானையின் தோல் தங்கப்பெற்ற. ஆட்டுஇசை தாளார்வரையில்; ஆட்டு-நடனம். மேவின தடம் காட்டில். மென் கைகொண்டு விழிபுதைத்து நின்றவாறு. புதைத்தோ; ஓ; அசை.

இது தலைவி நாணிக்கண் புதைத்தவழித் தலைவன் இடையூறு கிளத்தல். *(96)*

97. மென்பந் தனைய முலைச்சூ ளையர்சொல் வியந்துறைவோ
ரின்பந் தனையன் மழலைச்சொ லென்றெண்ணி யெய்துவரோ
முன்பந் தனைய முனிந்தோன் மயிலையின் மூட்டுவித்த
வன்பந் தனையல தன்பரை நோவ வழக்கில்லையே.

**(கு-ரை.)** மெல் பந்து அனைய. சூளையர்-பரத்தையர். தனையன் மழலைச்சொல் இன்பம் என்று. முன்பு அந்தன் நைய முனிந்தோன்-முற்காலத்து யமன் வருந்தும்படி கோபித்தவாறு. வல் பந்தனை அலது நோவ-வலிய ஊழ்வினையை அல்லாமல் நோவதற்கு. வழக்கு-நியாயம்.

இது தலைவி கூற்று. *(97)*

98. இல்லத் தமருக வென்றெம ரெம்மையு மேனலையு
மெல்லத் தமருக மைப்பா ரிடுக்கண் விளைந்ததன்பா
நெல்லத் தமருக லில்லா மயிலைநித் தன்பலிக்குச்
செல்லத் தமருக மார்த்தோன் வரையிற் றினமுடனே.

**(கு-ரை.)** இல்லத்து அமருக என்று. ஏனல்-தினை. மெல்ல தம் அருகு அமைப்பர். அன்பா இடுக்கண் விளைந்தது. நெல் அத்தம் அருகல் இல்லா-நெல்லும் பொன்னும் குறைதல் இல்லாத; நெல்லும் பொன்னும் இருத்தல் வளத்தைக் குறிக்கும்; "நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க" **(ஐங்குறுநூறு.)** தமருகம்-உடுக்கை. தம் உடன் அமைப்பர்.

இது பாங்கி தலைவனுக்கு இற்செறிப்பு அறிவுறுத்தல். *(98)*

99. உடலுளி யங்குயிர் போலுமன் பாவிவ ளோடுமணந்
திடலுளி யங்குலி சன்றாழ் மயிலையி லீசர்வெற்பின்
மடலுளி யங்குசப் பல்லுகிர் வேங்கை வருவதுகண்
டடலுளி யங்குமி றுங்காட் டிரவர லஞ்சுதுமே.

*(கு-ரை.)* உடலுள் இயங்கு உயிர். இவளோடு மணந்திடலை உள்ளி; உள்ளி-நினைந்து. குலிசன்-இந்திரன். குலிசன்றாழ்மயிலை: இந்திரன் மாயூரநாதரைப் பூசித்தமை **மாயூரப் புராணத்தால்** அறியலாகும். மடல் உளி அங்குசம் பல் உகிர்-மடலை உடைய உளியைப் போன்ற பல்லையும் தோட்டியைப் போன்ற நகத்தையும் உடைய; மடலென்றது உளியின்பக்கத்தை. உளியம் குமிறும்-கரடி முழங்குகின்ற.

இவளோடு மணந்திடல் உள்ளிக் காட்டில் இரவரல் அஞ்சுதும்.

இது பாங்கி தலைவனை இரவுவரல் விலக்கல். *(99)*

100. மேக முகந்தண்ட வோங்கிமென் பாளை விரித்தழகார்
மாக முகந்தண் டலைசூழ் மயிலைவள் ளற்பணிவோர்
நாக முகந்தண்ட கோளமெட் டும்புகழ் நண்ணியெண்ணில்
போக முகந்தண்டர் கோனென வாழ்வரிப் பூதலத்தே.

*(கு-ரை.)* மேகம் முகம் தண்ட-மேகத்தினுடைய முகத்தை அணுக. மா கமுகம் தண்டலை-பெரிய பாக்குமரச் சோலை. நாகம் உகந்து-தேவலோகத்தாரால் மகிழப்பெற்று. எண்ணில் போகம் முகந்து; முகத்தல்-கைக்கொண்டனு பவித்தல். அண்டர் கோன் என வாழ்வர்-இந்திரனைப்போல வாழ்வார். பூதலத்து வாழ்வர். *(100)*

---

## சிறப்புப் பாயிரம்

### கட்டளைக் கலித்துறை

★ கயிலையொன் றீச னருள்பெற வேண்டிக் கலித்துறையான்
மயிலையந் தாதி யொருநூறு செய்யுள் வகுத்தணிந்தான்
சயிலவன் றோள னிலக்கண மாகத் தமிழ்க்குறுமைந்
தியலையுந் தேரு மறையோன் மயிலை யிராமையனே.

★★★

★ இது பழைய செய்யுள். செய்தவர் பெயர் விளங்கவில்லை

# செய்யுள் முதற்குறிப்பகராதி

## எண் — பக்கவெண்


| | | | |
|---|---|---|---|
| அகலாகவம் | 29 | எங்குமகந்தனி | 18 |
| அஞ்சுகந்தங்குல | 30 | எழுமாதவனிக | 38 |
| அமராவதியபி | 34 | என்பரவத்தணி | 29 |
| அரவாரலங்க | 31 | என்னாகமாலை | 39 |
| அருமருந்தாரு | 21 | ஒன்றாதிருக்கு | 35 |
| அற்பகலாமதி | 3 | ஓடம்படவட | 32 |
| அறுவதனந்தடங் | 31 | கடனஞ்ச | 30 |
| அன்புடைக்கும்ப | 37 | கயிலையொன் | 42 |
| ஆர்க்கணிதானம் | 34 | கலசங்கரிக் | 12 |
| ஆரம்பரவும் | 38 | கற்பமருங்கலை | 14 |
| ஆவினிலாவந் | 10 | காலானலங்கலை | 38 |
| இடங்கிடையா | 37 | காவியம்பொன்று | 4 |
| இரவலராவன | 10 | கான்கண்டக | 33 |
| இருமந்தர | 21 | குறியமருங்கர | 31 |
| இல்லத்தமருக | 41 | கூடலையாறு | 35 |
| இலவுமருங்கற் | 32 | கேதத்துவந்தனை | 2 |
| இலையமலைக்கு | 20 | கேதப்படுகை | 33 |
| இன்றேனலம் | 33 | கொடுங்காலனுங் | 25 |
| இனியனகை | 13 | கொன்றத்தி | 10 |
| உடலுளியங் | 42 | கோலத்துருவங் | 39 |
| உத்தமனத்தி | 34 | சங்கத்தினந் | 13 |
| உத்தரகங்கை | 5 | சன்னத்தனாகச் | 17 |
| உயரையிராவண | 11 | சித்தரிலேகர் | 22 |
| உருகும்பசும்பொற் | 1 | சுகத்தினந்தத்து | 7 |
| உள்ளக்கவலையி | 22 | செல்வினஞ்சார | 23 |

சேவாகனத்தன் 11
சொல்லவமா 40
தகரமருக்குழ 27
தகவிலையம் 24
தனங்காத்திர 16
தனத்துக்கமைந்த 27
தனதடங்காட்டி 40
திருமயிலைப்பதி 9
தீக்குவித்தார 20
தீர்த்தனமாதங்க 29
துணிப்பாயலை 25
துயருந்திய 15
துவளவளைக்கும் 12
தேவருந்தானவ 39
நன்கொடிச்சிக் 26
நாயகமானக 27
நானத்தில 36
நிகரதிகந் 24
நினையாவருந் 28
நீதினடந்தமை 30
நீளாவணங்க 8
நுமருகமானனை 14
நெஞ்சத்திருக்கை 3
நோகாமனம் 18
பதியனந்தங்கள் 24
பரசமையத்தர் 25
பலதரங்கந்த 6
பாரத்தனத்தி 22
பின்னலங்காரள 18
பூங்காவியம் 16
பூமனையானை 2
பெய்யற்கெழுதரு 20
பேரமருந்துங்க 19
பொருந்தாரணி 19
பொற்பங்கனைய 26
போக்கவராதியை 8
மயிற்காயமாய 40
மறந்திருப்பாரல 23
மறுகுதலைக்கணி 37
மாதிடத்தானந் 36
மாயூரநாத 7
மின்னகரும்பணி 14
மெய்வாமனற்குன் 36
மென்பந்தனைய 41
மேகமுகந்தண்ட 42
மேதகிமாலைய 6
வந்தநஞ்சாரலின் 17
வலவருமைக்கு 15
வளமலினந்த 28
வித்துருமத்தியல் 4
வேதாகமத்துந்த 8
வைத்தசனங்கள் 9


———— x ————

# இதுவரை தெரியவந்துள்ள அந்தாதி நூல்களின் பெயர்கள் அகர வரிசையில் தரப்பெற்றுள்ளன.

**★ இக்குறியிட்டவை அச்சாகாதவை**

| நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
| --- | --- |
| அகத்தீசன் அந்தாதி | சா. வேங்கடராமன் |
| அகோரரந்தாதி | சிவானந்தன் |
| அங்காளேசுவரியம்மன் அந்தாதி | சண்முகனார் |
| அத்திகிரிவரதன் அந்தாதி | |
| அபிராமி அந்தாதி | அபிராமிபட்டர் |
| அம்பிகை அந்தாதி | தே. பழனிச்சாமி |
| அரங்கத்திழகலந்தாதி | தண்டபாணி சுவாமிகள் |
| அரசிலியந்தாதி | அ. சிதம்பரநாத முதலியார் |
| அருணகிரியந்தாதி | குகை நமச்சிவாயதேவர் |
| அற்புதத்திருவந்தாதி | காரைக்காலம்மையார் |
| ஆதிபுரி நிரோட்டக ககரயமக அந்தாதி | க.தி. கந்தசாமி கவிராஜர் |
| ஆதிவயலூர் வெண்பா அந்தாதி | சுந்தரநாதபிள்ளை |
| * ஆரூர் மெய்த்தேசிகர் மேல் பதிற்றுப் பத்தந்தாதி | |
| ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி | நம்பியாண்டார் நம்பி |
| ஆறெழுத்து அந்தாதி | அகத்திய முனிவர் |
| ஆறைப் பதிற்றுப் பத்தந்தாதி | ஏ.டி. இராமலிங்கம் பிள்ளை |
| இராமாநுஜ நூற்றந்தாதி | திருவரங்கத்த முதனார் |
| இளசைப் பதிற்றுப் பத்தந்தாதி | சிவஞான சுவாமிகள் |
| ஈங்கோய்மலை அந்தாதி | கே.எம். பாலசுப்பிரமணியம் |
| உலகம்மை கலித்துறை அந்தாதி | நமசிவாயக் கவிராஜர் |
| * எட்டெட்டு அந்தாதி | - |
| ஏகத்தாள் இதழகலந்தாதி | தண்டபாணி சுவாமிகள் |
| ஒற்றைக்கடை விநாயகரந்தாதி | மு.ரா. அருணாசலக் கவிராயர் |

| | |
|---|---|
| கச்சி ஆனந்தருத்திரேசர் பதிற்றுப் பத்தந்தாதி | கச்சியப்ப சுவாமிகள் |
| கச்சி இதழகலந்தாதி | ப.தி. கார்த்திகேய முதலியார் |
| கடவுளந்தாதி | இராமசுவாமியா பிள்ளை |
| கணபதி அந்தாதி | - |
| * கணபதி அந்தாதி | - |
| கந்தர்வெண்பாப் பதிற்றுப் பத்தந்தாதி | கணபதி சுப்பிரமணிய ஐயர் |
| கந்தரந்தாதி | அருணகிரி நாதர் |
| கல்வளையந்தாதி | சின்னத்தம்பிப் புலவர் |
| கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி | சிவஞான சுவாமிகள் |
| கலைமகளந்தாதி | செ. சீனித்தம்பி |
| களந்தைக்கயிலாய நாதர் வெண்பா அந்தாதி | - |
| களந்தைக் கலித்துறை அந்தாதி | - |
| காமாக்ஷியம்மன் அந்தாதி | எஸ்.ஆர். கணபதி செட்டியார் |
| காமாக்ஷியம்மை திருவந்தாதி | காமாக்ஷிதாசர் |
| காழி அந்தாதி | அருணாசலக் கவிராயர் |
| குடந்தை அந்தாதி | மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை |
| * கும்பேசர் வெண்பா அந்தாதி | டாக்டர் உ.வே. சாமிநாதையர் |
| குமரன் அந்தாதி | மாம்பழக்கவிச்சிங்க நாவலர் |
| குருந்தாசலப் பதிற்றுப் பத்தந்தாதி | கந்தசாமி சுவாமிகள் |
| குருதாதன் அந்தாதி | த்ண்டபாணி சுவாமிகள் |
| குளத்தூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி | மாதவச்சிவஞானயோகிகள் |
| குன்றுதோறாடும் சண்முகப் பெருமான் நிரோட்டகயமகவந்தாதி | சௌந்திர பாரதி |
| குன்றைத் திரிபந்தாதி | பாலசுப்பிரமணிய ஐயர் |
| கூடலந்தாதி | எம்.எஸ். பிச்சுவையர் |
| கைலைபாதி காளத்திபாதி அந்தாதி | நக்கீரதேவ நாயனார் |
| சங்கர நயினார் கோயிலந்தாதி | - |
| சங்கரன் திருவந்தாதி | வி.மு. சண்முகனார் |
| சடகோபர் சதக அந்தாதி | தண்டபாணி சுவாமிகள் |

| | |
|---|---|
| சடகோபரந்தாதி | கம்பர் |
| சந்தக் கலித்துறையந்தாதி | தண்டபாணி சுவாமிகள் |
| சரசுவதியந்தாதி | கம்பர் |
| சற்குரு வெண்பா அந்தாதி | ச.மு. கந்தசாமிப் பிள்ளை |
| சித்தரந்தாதி | - |
| சிதம்பரக் கலித்துறையந்தாதி | தியாகேச முதலியார் |
| சிதம்பர வெண்பா அந்தாதி | தியாகேச முதலியார் |
| சிராமலைத் தாயுமானார் அந்தாதி | வெ.ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் |
| சிராமலைப் பதிற்றுப் பத்தந்தாதி | - |
| சிலம்மைப் பதிற்றுப்பத்தந்தாதி | சின்னயச் செட்டியார் |
| சிவகாமியம்மை அந்தாதி | - |
| சிவகிரி ஒலியலந்தாதி | - |
| சிவகிரி பதிற்றுப்பத்தந்தாதி | பாலகுரு சுவாமி |
| சிவகிரி யமக அந்தாதி | மாம்பழக் கவிச் சிங்கநாவலர் |
| சிவபூசை அந்தாதி | அழகிய சொக்கநாத வரோதயன் |
| சிவபெருமான் தனித்திரு அந்தாதி | அ.வி. கிருஷ்ணசாமி ஐயர் |
| சிவபெருமான் திருவந்தாதி | கபிலதேவ நாயனார் |
| சிவபெருமான் திருவந்தாதி | பரணதேவ நாயனார் |
| சிவயோகநாயகி அந்தாதி | கு.செ. இராமசாமி |
| சிஷ்டரந்தாதி | - |
| சுப்பிரமணியரந்தாதி | - |
| சென்னைக் கந்தர் இதழகலந்தாதி | தண்டபாணி சுவாமிகள் |
| சென்னைக் கந்தசுவாமி வெண்பா அந்தாதி | தண்டபாணி சுவாமிகள் |
| சேடமலை அந்தாதி | பள்ளி கொண்டான் பிள்ளை |
| சேடமலை பதிற்றுப்பத்தந்தாதி | வல்லூர்த் தேவராச பிள்ளையவர்களின் மாணாக்கர் |
| ஞான அந்தாதி | குமார சுவாமி முனிவர் |
| தணிகை அந்தாதி | அ.மு. பரமசிவானந்தம் |
| தாயுமானேசுவரர் பதிற்றுப் பத்தந்தாதி | நாகமுத்துப் பாவாணர் |
| * திரிகூடத் திரிபந்தாதி | திரிகூடராசப்பக் கவிராயர் |

| | |
|---|---|
| திரிசிராமலை அந்தாதி | வேம்பை நாராயணன் |
| * திரிசிராமலைப் பதிற்றுப்பத்தந்தாதி | - |
| திருக்கருவைக் கலித்துறையந்தாதி | அதிவீர ராமபாண்டியர் |
| திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி | அதிவீர ராம பாண்டியர் |
| திருக்கருவை வெண்பா அந்தாதி | அதிவீர ராம பாண்டியர் |
| திருக்கழுக் குன்றத்தந்தாதி | ஜகந்நாத நாயகர் |
| திருக்குடந்தைத் திரிபந்தாதி | மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை |
| திருக்குற்றால யமக வந்தாதி | திரிகூடராசப்பக் கவிராயர் |
| திருக்கோகர்ண அந்தாதி | சுப்பிரமணிய ஐயர் |
| திருச்சிராமலை யமக அந்தாதி | மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை |
| திருச்சிற்றம்பல யமக அந்தாதி | சபாபதிப் பிள்ளை |
| திருச்சிற்றம்பல வெண்பா அந்தாதி | சி. தியாகராச செட்டியார் |
| திருச்சிற்றம்பல வெண்பா அந்தாதி | தியாகேச முதலியார் |
| திருச்சுழியல் வெண்பா அந்தாதி | கி. சுவாமிநாதன் |
| திருச்செங்காட்டங்குடி யமக அந்தாதி | நல்லூர்த்தியாகன் |
| திருச்செந்திலந்தாதி | திருவண்ணநாதக் கவிராஜர் |
| திருச்செந்தில் யமக அந்தாதி | அ. சிவசம்புப் புலவர் |
| திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி | சிவப்பிரகாச சுவாமிகள் |
| திருச்செந்தில் வெண்பாவந்தாதி | சிவானந்த சாகரயோகி |
| திருத்தணிகை அந்தாதி | கந்தப்பையர் |
| திருத்தணிகைப் பதிற்றுப்பத்தந்தாதி | நீ. சண்முகானந்த சுவாமி |
| திருத்தணிகை யமக அந்தாதி | சொக்கலிங்க தேசிகர் |
| திருத்தணிகை வெண்பா அந்தாதி | சண்முக முதலியார் |
| * திருத்தவத்துறைக் கலித்துறை அந்தாதி | - |
| * திருத்தவத்துறைத் திரிபந்தாதி | - |
| திருத்தில்லை யமக அந்தாதி | மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை |
| திருத்தென்சேறை யிதழகலந்தாதி | திருமலைக்கொழுந்து தேசிக சுவாமிகள் |
| திருத்தொண்டர் திருவந்தாதி | நம்பியாண்டார் நம்பி |
| திருநாவுக்கரசர் பதிற்றுப்பத்தந்தாதி | கே.எம். பாலசுப்பிரமணியம் |

| | |
|---|---|
| திருநூற்றந்தாதி | அவிரோதி ஆழ்வார் |
| திருநெல்லைத் திரிபந்தாதி | வீரபத்திரக் கவிராயர் |
| திருப்பழனிப் பதிற்றுப் பத்தந்தாதி | சோமசுந்தரம் பிள்ளை |
| திருப்பழைசைப் பதிற்றுப்பத்தந்தாதி | மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை |
| திருப்புகலூரந்தாதி | நெற்குன்றவாண முதலியார் |
| திருப்புடைமருதூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி | முத்துக்குமாரசாமிக் கவிராயர் |
| திருப்புத்தூர்ச் சீதளிநாதன் பதிற்றுப் பத்தந்தாதி | நா. கனகராஜ ஐயர் |
| திருப்புல்லைத் திரிபந்தாதி | கிருஷ்ணமாச்சாரியர் |
| திருப்பெருந்துறையமக அந்தாதி | மிதிலைப்பட்டி சிற்றம்பலக் கவிராயர் |
| திருப்பைஞ்ஞீலித் திரிபந்தாதி | மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை |
| திருப்போரூரந்தாதி | காஞ்சிபுரம் சபாபதி முதலியார் |
| திருமகள் அந்தாதி | தண்டபாணி சுவாமிகள் |
| திருமங்கைக் கரும்பேசர் பதிற்றுப் பத்தந்தாதி | - |
| திருமதீனத்துப் பதிற்றுப் பத்தந்தாதி | ஆ.கா. பிச்சை இபுராகீம் |
| திருமதீனத்து யமக வந்தாதி | ஆ.கா. பிச்சை இபுராகீம் |
| திருமதீனத்து வெண்பா அந்தாதி | ஆ.கா. பிச்சை இபுராகீம் |
| திருமயிலைத் திரிபந்தாதி | இராமையர் |
| திருமயிலை யமக வந்தாதி | தாண்டவராயக் கவிராயர் |
| திருமலைக் கந்தரந்தாதி | சிவராமலிங்கம் பிள்ளை |
| திருமலைக் கந்தரனுபூதி அந்தாதி | |
| திருமலை யமக வந்தாதி | நெல்லையப்பக் கவிராச பண்டாரம் |
| திருமலைக் குமாரசுவாமி வெண்பா அந்தாதி | நகரம் சங்கர பாண்டியனார் |
| திருமுட்டப் பதிற்றுப் பத்தந்தாதி | அழகிய மாணவாள ராமாநுஜர் |
| திருமெய்யத் திரிபந்தாதி | வீரபத்திரக் கவிராயர் |
| * திருமேனியார் கோயில் திரிபந்தாதி | பூ.அ. சிதம்பரநாத முதலியார் |

| | |
|---|---|
| திருவரங்கத்தந்தாதி | பிள்ளைப் பெருமாளையங்கார் |
| திருவரங்கப்பதிற்றுப் பத்தந்தாதி | வேங்கடாசலதாசன் |
| திருவருணை அந்தாதி | சைவ எல்லப்ப நாவலர் |
| திருவாமாத்தூர்த் திரிபுயமக அந்தாதி | அசலாம்பிகை அம்மாள் |
| திருவாரூரந்தாதி | சொக்கலிங்க செட்டியார் |
| திருவாரூர்பாதி திருவொற்றியூர் பாதிவெண்பா அந்தாதி | வித்துவான் தியாகராச செட்டியார் |
| திருவாலவாய் அந்தாதி | சொக்கலிங்க செட்டியார் |
| திருவாவினன்குடி பதிற்றுப் பத்தந்தாதி | சுப்பிரமணிய முனிவர் |
| திருவாவூர்த்திரிபந்தாதி | சிவப்பிரகாச உபாத்தியாயர் |
| திருவான்மியூர்க் கலித்துறை அந்தாதி | ஈ.எஸ். வரதராஜ ஐயர் |
| திருவானைக்காப் பதிற்றுப் பத்தந்தாதி | கே.வி. சுப்பையர் |
| திருவானைக்காப் பதிற்றுப் பத்தந்தாதி | தே. பெரியசாமிபிள்ளை |
| திருவானைக்கா யமக அந்தாதி | தண்டபாணி சுவாமிகள் |
| திருவிடை மருதூர்த்திரிபந்தாதி | மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை |
| திருவிடைமருதூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி | சபாபதி நாவலர் |
| திருவிளையாடலந்தாதி | சிவலிங்க உவாத்தியாயர் |
| * திருவுசாத்தானத் திரிபந்தாதி | - |
| திருவுறந்தைப் பதிற்றுப் பத்தந்தாதி | வைத்தியநாத செட்டியார் |
| திருவூறைப் பதிற்றுப் பத்தந்தாதி | மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை |
| திருவெவ்வுளூரந்தாதி | - |
| திருவேகம்பமுடையாரந்தாதி | பட்டினத்துப் பிள்ளையார் |
| திருவேகம்பரந்தாதி | சிவஞான சுவாமிகள் |
| திருவேகம்பரந்தாதி | - |
| திருவேங்கடத்தந்தாதி | பிள்ளைப் பெருமாளையங்கார் |

| | |
|---|---|
| திருவேரகத்தந்தாதி | கவித்தலம் வேலையரவர்கள் |
| திருவையாற்று அந்தாதி | இராமசாமி ஐயர் |
| திருவையாற்று நிரோட்டக யமக அந்தாதி | இராமசாமி ஐயர் |
| திருவையாற்றுப் பதிற்றுப் பத்தந்தாதி | முத்துச்சாமி பாரதி |
| திருவொற்றியூர் வடிவுடை யம்மன் அந்தாதி | தியாகேச முதலியார் |
| திருவோத்தூர் இளமுலை அம்பிகை அந்தாதி | வி. சாமிநாதப் பிள்ளை |
| தில்லை அந்தாதி | - |
| தில்லைக் கற்பக விநாயகர் வெண்பா அந்தாதி | சிதம்பரச் செட்டியார் |
| தில்லை நிரோட்டக யமக அந்தாதி | சு. வேலுச் சாமிப்பிள்ளை |
| தில்லை யிதழகலந்தாதி | தண்டபாணி சுவாமிகள் |
| தில்லைத் திரிபந்தாதி | தண்டபாணி சுவாமிகள் |
| துறைசை யமக அந்தாதி | மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை |
| துறைசை வெண்பா அந்தாதி | - |
| தென் கன்னிக் குமரி வெண்பா அந்தாதி | சாதுராம் சுவாமிகள் |
| தேசிக நாராயணர் திருவந்தாதி | மணவாள சுவாமி |
| தேவைத் திரிபந்தாதி | சின்னயச் செட்டியார் |
| நடுக் காவேரி பதிற்றுப்பத்தந்தாதி | சிவாநந்த சாகர யோகீசுவரர் |
| நான்முகன் திருவந்தாதி | திருமழிசை யாழ்வார் |
| நீதிபதி வேதநாயகர் அந்தாதி | சரவணபவாநந்தர் |
| நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி | பிள்ளைப் பெருமாளையங்கார் |
| நெல்லை யமக அந்தாதி | - |
| பசுவந்தனை வெண்பா அந்தாதி | சொக்கலிங்க செட்டியார் |
| பஞ்சாக்கர தேசிகரந்தாதி | கச்சியப்ப சுவாமிகள் |
| படையூரந்தாதி | அருணாசலம் பிள்ளை |
| பந்தனந்தாதி | ஔவையார் |
| பரங்கிரிக் கலித்துறையந்தாதி | மு.ரா. அருணாசலக் கவிராயர் |

| | |
|---|---|
| பரங்கிரிப் பதிற்றுப் பத்தந்தாதி | மு.ரா. அருணாசலக் கவிராயர் |
| பரங்கிரி வெண்பா அந்தாதி | மு.ரா. அருணாசலக் கவிராயர் |
| பவாணி பதிற்றுப்பத்தந்தாதி | கு.குமார சாமிப்பிள்ளை |
| பழநிப் பதிற்றுப்பத்தந்தாதி | தே.குரு. சுப்பிரமணிய ஐயர் |
| பழனி யமக அந்தாதி | பாலசுப்பிரமணியன் |
| பழனியாண்டவர் திருவருட்பாசுர அந்தாதி | ஏ.சிவசூரியப் பிள்ளை |
| பழமலையந்தாதி | சிவப்பிரகாச சுவாமிகள் |
| பாலைவனப் பதிற்றுப்பத்தந்தாதி | மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை |
| பிரமீசர் பதிற்றுப்பத்தந்தாதி | கச்சியப்ப சுவாமிகள் |
| பிள்ளையந்தாதி | தூப்புல் நயினாராசாரியர் |
| புகலூரந்தாதி | மேலைச் சிதம்பரனார் |
| புல்லை அந்தாதி | - |
| புலியூர் அந்தாதி | மயில்வாகனப் புலவர் |
| பூவாளூர்ப்பதிற்றுப் பத்தந்தாதி | மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை |
| பொன்வண்ணத்தந்தாதி | சேரமான் பெருமாள் நாயனார் |
| போரூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி | சண்முகம்பிள்ளை |
| மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகள் பதிற்றுப்பத்தந்தாதி | மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை |
| மதுரைப் பதிற்றுப் பத்தந்தாதி | பரஞ்சோதி முனிவர் |
| மதுரை யமக அந்தாதி | பலபட்டைச் சொக்கநாதப் புலவர் |
| மயிலத்தந்தாதி | பி.எம். இராஜமாணிக்கம். பிள்ளை |
| மயிலாசலத் தந்தாதி | சிந்நய உவாத்தியாயர் |
| மயிலைபாதி வான்மியூர்பாதி கலித்துறை யந்தாதி | கா. ஆறுமுக நாயகர் |
| மருதூர் அந்தாதி | தலைமலைகண்ட தேவர் |
| மறைசை யந்தாதி | சின்னத்தம்பிப் புலவர் |
| மாசிலாமணி யீசர் அந்தாதி | டாக்டர். உ.வே. சாமிநாதையர் |

| | |
|---|---|
| மாயூரநாதர் அந்தாதி | வே. முத்துசாமி ஐயர் |
| மாவை யந்தாதி | பொன்னம்பலம் பிள்ளை |
| மீனாட்சி சுந்தரம்பிள்ளை அந்தாதி | வித்துவான் தியாகராச செட்டியார் |
| மீனாட்சியம்மை பதிற்றுப் பத்தந்தாதி | தெய்வசிகாமணி குருக்கள் |
| முத்துக் குமாரசுவாமி அந்தாதி | முத்துக்குமர தாஸர் |
| முதல் திருவந்தாதி | பொய்கையாழ்வார் |
| முதலொலியலந்தாதி | தண்டபாணி சுவாமிகள் |
| மெய்யப்ப சுவாமிகள் பதிற்றுப் பத்தந்தாதி | காரைக்குடி இரா. சொ. சொக்கலிங்க செட்டியார் |
| வடகதிர்காம முருகன் அந்தாதி | வ.சு. செங்கல்வராயப் பிள்ளை |
| வடதிருமுல்லைவாயிலந்தாதி | சிவஞான சுவாமிகள் |
| வடிவேலன் அந்தாதி | வி. சுப்பையர் |
| * வயலூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி | சுந்தரம் பிள்ளை |
| வில்லிபாக்கம் சிவபெருமான் பதிற்றுப்பத்தந்தாதி | தண்டபாணி சுவாமிகள் |
| வில்வவன அந்தாதி | சுப்பு இராமசாமி முதலியார் |
| வெண்பா அந்தாதி | தத்துவராய சுவாமிகள் |
| வைணவி அந்தாதி | |
| ஸ்ரீ கந்தர்வெண்பா பதிற்றுப் பத்தந்தாதி | செ.ரா. கணபதி சுப்பிரமணிய ஐயர் |
| ஸ்ரீ கற்பக விநாயகர் வெண்பா அந்தாதி | இராகவன் முத்து |

★ ★ ★